இலக்கு
GLOBAL TAMIL MEDIA CENTER
வாராந்த மின்னிதழ்
Ilakku2009@gmail.com www.facebook.com/ilakkutamilnews https://twitter.com/Ilakku1
இதழ் 266 சனி, டிசம்பர் 23, 2023 13 பக்கங்கள்

# பேச்சுக்கு அழைப்பதன் மூலமாக ரணில் வகுக்கும் உபாயம் என்ன?

அகிலன்



## போரினால் முதன்மைப் பாதிப்புக்கு உள்ளாகுபவர்கள் சிறுவர்களே

தமிழில்: ஜெயந்திரன்

## 2024 ஆம் ஆண்டு உலகில் ஏற்படப்போகும் பொருளாதார மாற்றங்கள்

தமிழில்: ஆர்த்திகன்



தமிழ் நாடு – சென்னையில் நடைபெற்ற ZEE தமிழ் தொலைக்காட்சி நடத்தும் 2023 ஆண்டுக்கான சிறுவர்களுக்கான பாடல் போட்டியில் வெற்றிவாகை சூடிய செல்வி **கில்மிஷா** அவர்களுக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்

# தேர்தல் அச்சம் - தமிழ் அரசியல் கட்சிகளை சந்தித்த ரணில்



எதிர்வரும் வருடம் அரச தலைவர் தேர்தலை நடத்த இலங்கை அரசு திட்டமிட்டுள்ள நிலையில் தமிழ் மக்களின் வாக்குகளை பெறும் முயற்சியில் தென்னிலங்கை அரசியல் கட்சிகளும் மற்றும் உலக நாடுகளும் மறைமுகமாக ஈடுபட்டு வருகின்றன. இந்த நிலையில் தமிழ் மக்களின் பிரச்சனைகள் தொடர்பில் இன்று இலங்கை அதிபர் ரணில் விக்கிரமசிங்கா தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகளை சந்தித்திருந்தார்.

இந்த சந்திப்பில் ஆர். சம்பந்தன், சாணக்கியன், ஜி. கருணாகரன், ரி. கலையரசன் மற்றும்

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்

# ஐரோப்பிய சதுரங்க போட்டியில் வெற்றியீட்டிய தமிழ் சிறுமி

பிரித்தானியாவை சேர்ந்த தமிழ் சிறுமி குரோசியாவில் இடம்பெற்ற ஐரோப்பிய நாடுகளுக்கு இடையிலான சதுரங்க போட்டியில் முதலிடத்தை வென்றுள்ளார்.

போதனா சிவானந்தன் என்ற 8 வயதுள்ள சிறுமியே இந்த போட்டியில் 13 இற்கு 8.5 புள்ளிகளை பெற்று முதலிடத்தை பெற்றுள்ளார். 13 சுற்றுக்களாக இடம்பெற்ற இந்த போட்டியில் 555 போட்டியாளர்களும், 48 சாதனையாளர்களும், 50 அனைத்துலக நிபுணர்களும் கலந்துகொண்டி



ருந்தனர். கடந்த சனிக்கிழமை(16) குரோசியாவில் இந்த போட்டி இடம்பெற்றிருந்தது.

நான் எப்போதும் வெற்றி பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதுண்டு. சில சமயங்களில்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# இஸ்ரேலின் போர் நிறுத்த கோரிக்கையை நிராகரித்தது ஹமாஸ்

காசாவில் இஸ்ரேல் தாக்குதல்களை முற்றாக நிறுத்தும் வரையிலும் 40 கைதிகளை விடுவிப்பதற்கான போர் நிறுத்தம் என்ற இஸ்ரேலின் கோரிக்கையை நாம் ஏற்கப்போவதில்லை என ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.



ஹமாஸின் அரசியல் பிரிவின் தலைவர் இஸ்மயில் ஹனியா எகித்துக்கு பயணம் மேற்கொண்டு எகிப்பத்தின் புலனாய்வுத்துறையின் தலைவர் மற்றும் ஏனைய அதிகாரிகளை போர் நிறுத்தம் மற்றும் கைததிகள் பரிமாற்றம் தொடர்பில் சந்தித்த நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. ஒரு வாரம் தாம் சண்டையை நிறுத்துவதாகவும், அதற்கு பதிலாக ஹமாஸிடம் உள்ள பெண்கள் மற்றும் சிறுவர்கள் விடுவிக்கப்பட வேண்டும் என இஸ்ரேல் வைத்த கோரிக்கையை ஹமாஸ் நிராகரித்துள்ளது.

முதல் தடவையாக பாலஸ்தீன இஸ்லாமிய ஜிகாத் அமைப்பும் இந்த பேச்சுக்களில் கலந்துகொண்டிருந்தது. இரு அமைப்புக்களும் இஸ்ரேலின் கோரிக்கையை

தொடர்ச்சி 123ஆம் பக்கம்

# எமது பொருளாதார வீழ்ச்சிக்கு நாமே காரணம்

## பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர்




எமதுநாட்டின்உள்ளகஅரசியல் பிரச்சனைகளேபொருளாதார வீழ்ச்சிக்கும் நாட்டின் அழிவுக்கும் காரணம், அதற்கு இந்தியாவோ, அமெரிக்காவோ அல்லது ஆப்கானிஸ்த்தானோ காரணமல்ல என பாகிஸ்தனின் முன்னாள் பிரதமர் நவாஸ் செரீப் தெரிவித்துள் ளார்.

நாட்டின் அரசாட்சியிலும், அரசியலிலும் படையினரின் அதிக தலையீடுகள் இதற்கு காரணம். இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் நீண்டகாலப் பகையிருந்தாலும் தற்போதையநிலைக்குஇந்தியாவோ அமெரிக்காவோ காரணமல்ல. நாமே எமது காலில் சுட்டுள்ளோம் என அவர் பாகிஸ்தானின் பிரதான எதிர் கட்சிகளில் ஒன்றான முஸ்லீம் லீக் நவாஸ் கட்சியின் மாநாட்டில் உரையாற்றும்போது கடந்த செவ்வாய்கிழமை(19) தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி 13 ஆம் பக்கம்

# மீண்டும் பரவும் கோவிட்–19 எச்சரிக்கின்றது ஐ.நா



கோவிட்-19 வைரஸில் இருந்து பிறள்வடைந்த ஒமிகிரோன் என்ற வைரஸ் மீண்டும் பிறள்வடைந்து வேகமாக பரவி வருவதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்தள்ளது.

ஜே.என்-1 எனப்படும் இந்த வகை வைரஸ் இந்தியா, பிரித்தானியா, சீனா, அமெரிக்கா உட்பட பல நாடுகளில் பரவி வருகின்றது. எனினும் அதன் ஆபத்துக்கள் குறைவாகவே உள்ளது. தற்போதைய தடுப்பு மருந்து அதற்கான பாதுகாப்பை வழங்கக்கூடியது.

எனினும் குளிர் காலத்தில் அது பரவும் விகிதம் மேலும் அதிகரிக்கலாம் என்பதே கவலை தருவதாக ஐ.நா மேலும் தெரிவித்துள்ளது. சுவாசத் தொகுதியை தாக்கும் வைரஸ், காச்சலை ஏற்படுத்தும் வைரஸ், நிமோனியா வைரஸ் ஆகியவையும் பரவும் ஆபத்துக்களும் உண்டு.

கொரோனோ வைரஸ் தொடர்ச்சியா பிறள்வடைந்து வருகின்றது. சில சமயங்களில் மிகவும் மோசமான வைரஸ் வகையை உருவாக்கலாம். இது தொடர்பில் உலக சுகாதார நிறுவனம் ஆய்வு செய்து வருகின்றது.


தற்போதைய நிலையை கட்டுப்படுத்துவதற்கு நாம் முகக்கவசங்களை அணிவதுடன், கைகளை கழுவுதல், தனிமைப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளை இயன்றவரை கடைப்பிடிக்க வேண்டும் என ஐ.நா தெரிவித்துள்ளது.

# செக் குடியரசில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் 15 பேர் பலி

செக் குடியரசின் தலைநகர் பிராக்கில் உள்ள சார்ள் பல்கலைக்கழகத்தில் பல்கலைக்கழக மாணவர் ஒருவர் சக மாணவர்கள் மீது மேற்கொண்ட துப்பாக்கிபிரயோகத்தில் இதுவரையில் 15 பேர் கொல்லப்பட்டதுடன், 25 இற்கு மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கலைப்பீட மாணவர் ஒருவரே இந்த தாக்குதலை தன்னியங்கி துப்பாக்கியின் மூலம் மேற்கொண்டுள்ளார். பல்கலைக்கழகத்தின் நான்காவது தளத்தில் இருந்து எதிரில் உள்ள கட்டிடங்கள் விரிவுரை மண்டபங்கள் மற்றும் வீதியால் சென்றவர்கள் மீது சரமாரியான துப்பாக்கி பிரயோகத்தை அவர் மேற் கொண்டுள்ளார்.

இந்த தாக்குதலை தொடர்ந்து சம்பவ இடத்திற்கு விரைந்த காவல்துறையினர் 200 இற்கு மேற்



பட்ட மாணவர்களை அங்கிருந்து பாதுகாப்பாக அகற்றியுள்ளனர். இன்று காலை அவர் தனது தந்தையையும் சுட்டுப்படுகொலை செய்த பின்னரே இந்த கோரச் சம்பவத்தை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்கா போன்ற நாடுகளில் இடம்பெறும் துப்பாக்கி சூட்டு சம்பவங்களால் ஈர்க்கப்பட்ட

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# உக்ரைன் போர் ஐரோப்பாவை அழிக்கின்றது – போரல்



உக்ரைன் - ரஸ்ய போர் மற்றும் பாலஸ்தீன - இஸ்ரேல் போர் தொடர்பில் நாம் தீவிரமாக செயற்பாடாது விட்டால் ஐரோப்பா மிகப்பெரும் அளிவைச் சந்திக்கும் என ஐரோப்பிய ஒன்றியத்தின் இராஜதந்திர பேச்சாளர் ஜோசப் போரல் தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை(20) பூகோள அரசியல் தொடர்பான மாநாட்டில் பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். ரஸ்யா இந்த போரில் வெற்றியீட்டினால் ஐரோப்பாவுக்கு ஆபத்தாக முடியும். அதேபோலவே பாலஸ்த்தீன - இஸ்ரேல் போரை நாம் நிறுத்தா விட்டால் அதுவும் ஐரோப்பாவுக்கு ஆபத்தாகவே முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, உக்ரைனுக்கு 50 பில்லியன் டொலர்கள் நிதியை ஐரோப்பிய ஒன்றியம் வழங்குவதற்கு ஹங்கேரி உட்பட சில நாடுகள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. அமெரிக்காவும் தொடர்ந்து நிதியை வழங்க மறுத்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

# போரை எதிர்கொள்ள முடியாத கவலையில் அமெரிக்கா

அமெரிக்க பாதுகாப்பு தலைமையகமான பென்ரகனின் அதிகாரிகளை அதிக கவலைகள் சூழ்ந்துள்ளதாக அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட பொலிற்றிக்கோ என்ற ஊடகம் புதன்கிழமை(20) தெரிவித்துள்ளது.

அதற்கான காரணம் ஏமனின் ஹதீஸ் படையினர் மேற்கொண்டுவரும் தொடர் தாக்குதல்களே. ஏமன் படையினர் செங்கடல் பகுதியில் மேற்கொள்ளும் ஆளில்லாததாக்குதல் விமானம் மற்றும் ஏவுகணைகளை முறியடிப்பதற்கு அதிகளவு செலவாவதே அமெரிக்காவை சூழ்ந்துள்ள கவலைகள்.



செங்கடலின் ஊடான பயணத்தை நிறுத்துவதான 6 இற்கு மேற்பட்ட பெரிய கப்பல் நிறுவனங்கள் தெரிவித்துள்ள நிலையில் இந்த செய்தியை பொலிற்றிக்கோ வெளியிட்டுள்ளது. பல நாடுகளின் கப்பல்கள்தாக்கி சேதப்படுத்தப்பட்டதுடன், ஒரு கப்பல் கைப்பற்றப்பட்டு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

செங்கடலில் நிலைகொண்டுள்ள அமெரிக்க, பிரான்ஸ் மற்றும் பிரித்தானியா கடற்படையினரால் இதனை தடுக்க முடியாது போவதும் அந்த பகுதியின் ஊடாக போக்குவரத்து முடங்கும் நிலையை ஏற்படுத்தியுள்ளதுடன், உலகின் பொருளாதாரத்தையும் ஆட்டம் காணவைக்கலாம் என்ற கருத்துக்கள் எழுந்துள்ளன.

ஆனால் தற்போது எழுந்துள்ள பிரச்சனை என்னவெனில் அமெரிக்காவினால் சமாளிக்க முடியாத செலவுமிக்க போர் தான்.

அதாவது கடந்த 2 மாதங்களில் 38 ஆளில்லாத தாக்குதல் விமானங்களையும், பல ஏவுகணைகளையும், அமெரிக்க கடற்படை சுட்டுவீழ்த்தியுள்ளது. கடந்த சனிக்கிழமை மட்டும் அமெரிக்காவின் கார்னி என்ற டிஸ்ரேயர் கப்பல் 14 ஆளில்லாத தாக்குதல் விமானங்களை சுட்டுவீழ்த்தியுள்ளது. இது ஒரு தாக்குலில் மட்டும்.

அவற்றை சுட்டு வீழ்துவதற்கு அமெரிக்கா வானுக்கு ஏவும் சாம் வகை ஏவுகணைகளை பயன்படுத்துகின்றது. 2000 டொலர்கள் பெறுமதியான விமானங்களை சுட்டுவீழ்த்த 2 மில்லின் டொலர்கள் பெறுமதியான ஏவுகணைகளை அமெரிக்கா பயன்படுத்துவது என்பது விமானத்தின் விலையைவிட எவுகணையின் விலை 1000 மடங்கு அதிகமாகும் என்பதாகும்.

அதாவது நாம் அவர்களின் விமானங்களை சுட்டுவீழ்த்தினாலும் அது அவர்களுக்கு தான் வெற்றி, அதாவது விமானங்களை சுட்டாலும் அவர்களுக்கு தான் வெற்றி, சுடாவிட்டாலும் அது எமது கப்பல்களை தாக்கினால் அவர்களுக்குத்தான் வெற்றி என அமெரிக்காவின் புலனாய்வு அமைப்பான சி.ஐ.ஏயின் அதிகாரிமைக் மொல்றோய் தெரிவித்துள்ளார்.

எனவே அவற்றை அழிப்பதற்கான மலிவான வழிகளை நாம் தேடவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தள்ளார்.

ஹதீஸ் அமைப்பினரின் தாக்குதல் விமானங்கள் ஒவ்வொன்றையும் வீழ்த்த 92 தொடக்கம் 130 கடல் மைல்கள் தூரவீச்சுக்கொண்ட Standard Missile-2 தேவைப்படுகின்றன. அவை 2.1 மில்லியன் டொலர்கள் பெறுமதியானவை. ஆவற்றைவிட Sea Sparrow ஏவுகணை அல்லது airburst rounds ஏவுகணைகளை

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

இலக்கு

# இறைமையைப் பாதுகாக்க புதிய தரங்கள் கொண்ட நடைமுறைக் கூட்டுத்தலைமைத்துவம் 2024இல் தேவை

2023ம் ஆண்டு முடிவடையும் வாரம் தொடங்குகிறது. இந்த நேரத்தில் உலகம் என்றும் இல்லாத நெருக்கடிகளை நடைபெற்றுக் கொண்டிருக்கும் உக்ரேன் ரஸ்யப் போரினாலும் இஸ்ரேலின் பலஸ்தீனிய ஆக்கிரமிப்பு போராலும் கூடவே வடகொரியா, ஈரான் போன்ற நாடுகளும் அணுவாயுதப் பலம் பெற்ற நிலையிலும் தாய்வான் கொங்கொங் மேலான சீனாவின் உரிமைப்பிரச்சினைகளாலும் இலங்கையில் ஈழத்தமிழர்கள் மேல் 1978 முதல் 45 ஆண்டுகால சிறிலங்கா நடத்தும் "மக்கள் மேலான யுத்தத்தினாலும்" இதற்கு இந்திய அமெரிக்க கூட்டு ஆதரவாலும் 2024இல் சந்திக்கும் என்பது உலக அரசியல் விஞ்ஞான ஆய்வாளர்களின் கருத்தாக உள்ளது. இந்தச் சிக்கலான உலக நிலைமைக்குக் காலநிலை நெருக்கடிகளும் பெருந்தொற்றுக்களின் பரவல்களும் இவற்றால் மனித குலமே தனது இயல்பான உழைப்புப் பலத்தையும் நிதிப்பலத்தையும் இழப்பது மேலும் மனிதப் பேரிழப்புக்களுக்கும் குடிவரவுகளும் குடியகல்வுகளும் அரசியல் புகலிட அலைவு உலைவுகளும் குறுகிய காலத்தில் ஈடுசெய்ய இயலாத மனித அவலங்களை 2024இல் தோற்றுவிக்கும் என்பதும் எதிர்வு கூறல்களாக உள்ளன.

இந்த உலகின் புதிய சுற்றுச் சூழலை எதிர் கொள்ளக் கூடிய புதிய தரங்கள் கொண்ட நடைமுறைத் தலைமைத்துவம் உடன் தேவை என்பது உலகின் முக்கிய மாதஇதழான "வெளிநாட்டு விடயங்கள் (Foreign Affairs) இன் 2024 சனவரி பெப்ருவரி இதழில் தலைசிறந்த ஆய்வாளரான 'பிலிப் செலிக்கோ (Philip Zelikow)' எழுதிய அமெரிக்க ஆட்சிக்கலையின் தேய்மானம் - நெருக்கடி யுகத்தில் எப்படி கொள்திறனை மீளமைத்தல் ['The Atrophy of American statecraft'-How to Restore Capacity for an Age of Crisis)] என்னும் ஆய்வுக்கட்டுரையில் "இப்படிச் செய்யலாம் என்று சொல்வது இலகுவான வேலை ஆனால் அதனை எப்படி கட்டமைப்பது என்பதுதான் கடினமான வேலை. 'இலட்சியங்கள்' கொள்கைகள் அல்ல. அமெரிக்காவின் அரச செயலாளர் டீன் ரஸ்க் (Dean Rusk) அவர்கள் 'இலட்சியங்கள் மிகக் கூடியளவு குழந்தை இறப்பு வீதம் கொண்டவை குறுகிய காலத்தில் மறைந்து விடுவன' எனக் கூறினார். அதிக அனுபவமுள்ள அரசியல்வாதியென உலகம் போற்றும் முன்னாள் பிரித்தானிய பிரதமர் வின்சன் சேர்ச்சில் அவர்கள் 'எண்ணங்கள் சிறகு விரித்து பறக்கும். ஆனால் அனைத்துலக மாநாடுகளின் பின் அழுக்குத் தெருக்களில் மிகவும் கஸ்டப்பட்டு நடக்கும்" என எண்ணங்களை அனைத்துலக நிலையில் நடைமுறைப்படுத்தவதில் உள்ள நடைமுறை எதார்த்தத்தை எடுத்துரைத்தார். எனவே எப்படிச் செய்வது என்பதே ஆட்சிக்கலை. நெருக்கடி நிலையில் மக்களுக்கு செயல் ஆற்றல் மிகுந்த ஆட்சிக்கலைச் செயற்பாடுகள் உடன் தேவை. இந்த மக்களுக்குச் சத்தியளிக்கும் ஆற்றல் திறன்களை எப்படி மக்களுக்கு வெற்றியளிக்கும் என ஒருங்கிணைப்பதிலேயே கூட்டுத் தலைமைத்துவம் உருவாகும்.

அமெரிக்காவின் இன்றைய ஆட்சிக்கலை தேய்மானம் குறித்து பிலிப் செலிக்கோ கூறும் இந்த ஆட்சிக்கலையை முன்னெடுத்தல் குறித்த சிந்தனைகள் ஈழத்தமிழர்களைப் பொறுத்த மட்டிலும் 2024 இல் ஈழத்தமிழர்களுக்குத் தங்கள் ஆட்சிக்கலையை உறுதியாக வெளிப்படுத்தக் கூடிய இறைமையைப் பாதுகாக்க வல்ல புதிய தரங்கள் கொண்ட நடைமுறைக் கூட்டுத்தலைமைத்துவம் உடன் தேவை என்பதையும் அதனைப் பேச்சளவில் பேசாது செயல்முறைப்படுத்த வேண்டும் என்பதையும் வெளிப்படுத்தி நிற்கின்றன.

மேலும் ஐக்கிய நாடுகள் நிதியத்தின் உறுப்பினராகவுள்ள சிறிலங்காவின் முன்னாள் மனித உரிமைகள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதனின் பின்வரும் கூற்று ஈழத்தமிழர்களின் மேலான மக்கள் மேலான சிறிலங்காவின் யுத்தம் 2024இலும் தொடரும் என்பதை எதிர்வு கூறுகிறது. "2024ம் ஆண்டுக்கான சிறிலங்காவின் வரவுசெலவுத் திட்ட பாதுகாப்புச் செலவினங்களுக்கான ஒதுக்கீடு 423 பில்லியன் ரூபாக்கள். மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6.5 வீதமாக அமைந்த இந்தப் பெருநிதி நாட்டின் கல்வி மற்றும் மருத்துவ துறைகளுக்கான ஒதுக்கீடுகளை விடப் பன்மடங்கு அதிகம். அதே வேளை சிறிலங்கா இராணுவமானது சட்டத்திற்கு அமைவாகச் செயற்படாமல் பொதுநிதியைத் தமது விருப்பத்திற்கு ஏற்ப செயற்படுத்தும் கட்டமைப்பாக எழுச்சி பெற்றுள்ளது. சிறிலங்காவின் கடற்படை மற்றும் விமானப்படையின் 2022ம் ஆண்டுக்கான கணக்காய்வு அறிக்கையும் சிறிலங்கா இராணுவத்தின் கணக்காய்வு அறிக்கை போன்றே நிதிமுகாமைத்துவ முறைகளுக்கு உட்படுத்தப்படாது நிதிமுகாமைத்துவம் செய்யப்பட்டிருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. சட்டங்களுக்கு அமைவாகச் செயற்படும் ஒரு சமூகத்தை உருவாக்க வேண்டும் என்றால் இராணுவத்தைப் பொறுப்புக் கூற வைக்க வேண்டும். ஆனால் பொதுநிதியினை இராணுவம் கையாளுகின்ற முறைமை குறித்துக் கூட பொறுப்புக்கூறாத கட்டமைப்பாக இராணுவம் செயற்படுகையில் இந்த இராணுவம் மனித உரிமைகள் தொடர்பில் எவ்வாறு பொறுப்புக் கூறும்" இந்தக் கேள்வி சிறிலங்கா தன்னை சனநாயக குடியரசு என்று பெயரளவில் சொல்லிக் கொண்டு சிங்களப் பெரும்பான்மைப் பாராளுமன்ற கொடுங்கோன்மை மூலமான இராணுவச் சர்வாதிகார ஆட்சியை 2024லும் ஈழத்தமிழர்களுக்கு அளிக்கும் என்பதையும் உலகம் அதனைக் கண்டுக்காமல் பயணிக்கும் என்பதையும் இதனை மாற்ற 2024 இல் ஈழத்தமிழர்களுக்குத் தங்கள் ஆட்சிக்கலையை உறுதியாக வெளிப்படுத்தக் கூடிய இறைமையைப் பாதுகாக்க வல்ல புதிய தரங்கள் கொண்ட நடைமுறைக் கூட்டுத்தலைமைத்துவம் உடன் தேவை என்பதையும் தெளிவுபடுத்துகிறது.

மேலும் போதைப் பொருள் கடத்தல்காரர்களையும் பாதாளக் குழுக்களையும் ஒழிப்பது தொடர்பாகச் சிறிலங்காவின் பொதுப்பாதுகாப்பு அமைச்சர் ட்ரான் அலஸ் தீவிர சட்டநடவடிக்கைகள் எடுக்கப் போவதாகச் சிறிலங்காப் பாராளுமன்றத்தில் கடந்த வாரத்தில் உரையாற்றுகையில் சட்டத்திற்கு அப்பாற்பட்ட முறையில் படைகள் செயற்பட்டு கண்ட இடத்தில் சுடுதலைப் பயன்படுத்தி அவர்களை அழிப்பர் என சட்டத்திற்கு அப்பாற்பட்ட முறையில் சிறிலங்காப் படைகள் செயற்படுதல் என்பது சிறிலங்காவின் அரச கொள்கையாக உள்ளது என்பதை உலகுக்குப் பகிரங்கப்படுத்தியுள்ளார்.

தன் குடிகள் என்று சொல்லிக் கொண்டு ' ஈழத்தமிழ் மக்கள் மேலான யுத்தத்தை' அனைத்துலக சட்டங்களுக்கு எதிராக 1978 இல் பிரகடனப்படுத்திக் கண்ட இடத்தில் சுடவும் சுட்ட இடத்தில் விசாரணையின்றி எரிக்கவும் 1979 இல் பயங்கரவாதத் தடைச்சட்டத்தால் அனுமதித்து இன்று வரை கடந்த 45 ஆண்டுகாலமாகச் சிறிலங்காவின் அரசபயங்கரவாதத்தை நடைமுறைப்படுத்தும் அரசகொள்கை 2024இலும் ஈழத்தமிழ் மக்களுக்குச் சிறிலங்கா அரசபயங்கரவாதத்தால் ஈழத்தமிழர்களின் உயிர் உடைமைகள் மற்றும் நாளாந்த வாழ்வுக்கு இனங்காணக் கூடிய அச்சத்தை சிறிலங்கா கொடுக்கும். இதனை பொதுப்பாதுகாப்பு அமைச்சர் ட்ரான் அலசின் பேச்சு உறுதிப்படுத்திய நிலையில் அனைத்துலக தரத்துக்கு ஏற்ப பதிய பயங்கரவாதத் தடைச்சட்டம் என்பது வெறும் ஏமாற்று வேலை என்பதை உலக நாடுகளுக்கும் உலக அமைப்புக்களுக்கும் எடுத்து விளக்கி இந்தப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை முற்று முழுதாகச் சிறிலங்கா 2024இல் நீக்குவதற்கான அனைத்து அழுத்தங்களையும் உலக நாடுகளுக்கும் அமைப்புக்களுக்கும் உலகத் தமிழர்கள் ஏற்படுத்த வேண்டுமென்பது இலக்கின் இவ்வாற எண்ணமாக உள்ளது. இதற்கும் 2024 இல் ஈழத்தமிழர்களுக்குத் தங்கள் ஆட்சிக்கலையை உறுதியாக வெளிப்படுத்தக் கூடிய இறைமையைப் பாதுகாக்க வல்ல புதிய தரங்கள் கொண்ட நடைமுறைக் கூட்டுத்தலைமைத்துவம் ஈழத்தமிழர்களின் உலகளாவிய அறிவுப்பலம் நிதிப்பலம் ஊடகப்பலத்துடனான இணைப்புடன் உடன் தேவை என்பதை இலக்கு மீளவும் வலியுறுத்த விரும்புகிறது.

**ஆசிரியர்**

# பேச்சுக்கு அழைப்பதன் மூலமாக ரணில் வகுக்கும் உபாயம் என்ன?

**அகிலன்**

அடுத்த வருடத்தில் நடைபெறப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் போட்டியிடுவார் என்பது இதுவரையில் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படவில்லை இருந்தபோதிலும், அதனை இலக்காகக் கொண்ட காய் நகர்த்தல்களை அவரது ஆதரவாளர்கள் ஆரம்பித்துவிட்டார்கள். கட்சி சார்பற்ற முறையில் ஒரு "பொது வேட்பாளராகவே" ரணில் போட்டியிடுவார் என ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர்களில் ஒருவரான ரவி கருணாநாயக்க அறிவித்திருக்கின்றார். ஐ.தே.க. வேட்பாளராகக் களமிறங்குவதைவிட, பொது வேட்பாளராகப் போட்டியிடுவதன் மூலமாக மற்றைய கட்சிகளின் ஆதரவையும் தக்கவைத்துக்கொள்ளலாம் என ரணில் தரப்பு கருதுவதாகத் தெரிகின்றது.

அரசியலரங்கில் பல நிகழ்வுகள் இப்போது இடம்பெற்றுவந்தாலும், அவை அனைத்தும் ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்டவையாகத்தான் இருக்கின்றன. மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியாக வேண்டும் என்ற இலக்குடன் ரணில் முன்னெடுத்துவரும் நகர்வுகளுக்கு, ஆதரவாக அவரது நம்பிக்கைக்குரிய ஆதரவாளர்கள் பலர் தீவிரமாகச் செயற்படத் தொடங்கியிருக்கின்றார்கள். கொழும்பின் மையப் பகுதியில் ரணிலின் தேர்தலை இலக்காகக் கொண்ட செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக அலுவலகம் ஒன்று ஜனவரியில் திறக்கப் படவிருக்கிறது. அதனுடன் இணைந்ததாக தேர்தலுக்கான செயற்பாடுகளை முழுவீச்சில் முன்னெடுக்க ரணில் தரப்பு தயாராகியிருக்கின்றது.

ஜனாதிபதிப் பதவியிலிருந்து மக்கள் போராட்டத்தின் மூலமாக கோட்டாபய ராஜபக்ஷ தூக்கி எறியப்பட்டமையால், அதிஷ்ட வசமாக ஜனாதிபதியாகியவர்தான் ரணில். கோட்டாபயவின் எஞ்சிய இரண்டரை வருடங்கள் மட்டும்தான் அவர் ஜனாதிபதியாக இருக்க முடியும். ஆனால், மீண்டும் ஒருமுறை மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியாக வேண்டும் என்பது அவரது தற்போதைய இலக்கு. "மக்கள் ஆணையைப் பெறாதவர்" என்று எதிர்த் தரப்பினர் சொல்வதை முறியடிக்க வேண்டுமானால், மக்கள் வாக்குகள் மூலமாக ஜனாதிபதியாக வேண்டும்.

அதற்கான முயற்சியில் இறங்கியிருக்கும் அவருக்கு பலமான பக்கங்களும் உள்ளன. பலவீனமான பக்கங்களும் உள்ளன.

பலமான பக்கங்கள் எனக் கூறும் போது, நாடு எதிர்கொண்ட பாரிய பொருளாதார நெருக்கடியை அவரால்தான் ஓரளவுக்காவது முடிவுக்குக் கொண்டுவர அவரால்தான் முடிந்தது என்று மக்கள் நம்புகின்றார்கள். பொருளாதார நெருக்கடியை உச்சத்துக்குக் கொண்டு சென்றவர் கோட்டாபய, மற்றும் பஸில் என்ற கருத்து சிங்கள மக்களிடம் உள்ளது. கோட்டாபய நாட்டைவிட்டு வெளியேறி, பதவியைத் துறந்த போது, அதிகாரத்தைப் பெறுவதற்கு சஜித் பிரேமதாஸ தயங்கினார். நெருக்கடியைத் தன்னால், சமாளிக்க முடியாது என அவர் கருதியது அந்தத் தயக்கத்துக்குக் காரணம் என்பதுதான் சாதாரண சிங்கள மக்களின் கருத்து.

இந்த நிலையில், துணிச்சடன் அதிகாரத்தைக் கைகளில் எடுத்து, நாட்டை வழமைக்குக் கொண்டுவர ரணிலால் முடிந்தது. இதேபோல, எதிர்காலத்திலும் நெருக்கடிகளை எதிர்கொள்ளக் கூடியவராக ரணில் இருப்பார் என்பது சிங்கள மக்களில் பெரும்பாலானவர்களின் கருத்தாக இருக்கின்றது. இது ரணிலின் முதலாவது பலம். சாதாரண மக்களிடம் காணப்படும் இந்தக் கருத்தை வலுப்படுத்துவதில், ரணிலின் ஆதரவாளர்கள் ஈடுபட்டுள்ளார்கள். ரணிலும், மக்களிடம் காணப்படும் அந்த நம்பிக்கையைத் தக்கவைத்துக்கொள்வதில் முழுமையான கவனத்தைச் செலுத்துகின்றார். ரணிலுக்கு சாதகமாகவுள்ள முதலாவதும் பலமானதுமான அம்சம் அதுதான்!



எதிரணியினரிடையே பலமான ஒரு வேட்பாளர் இல்லாமலிருப்பது ரணிலுக்குப் பலத்தைக் கொடுக்கும் இரண்டாது விடயம். ஜே.வி.பி.யின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க கணிசமான வாக்குகளை இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் பெற்றுக்கொள்வார் என எதிர்பார்க்கப்பட்டாலும், வெற்றிபெறத் தேவையான 50 வீதமான வாக்குகளை அவரால் பெறமுடியாது. வாக்கெடுப்பில் அவர் மூன்றாவதாக வருவதற்கே வாய்ப்புக்கள் உள்ளன.

சஜித் பிரேமதாஸவின் பலம் எவ்வாறானதாக இருக்கும் என்பது திட்டவட்டமாகக் கூறக்கூடியதாக இல்லை. காரணம், அவருடன் இணைந்திருக்கும் சரத் பொன்சேகா, சம்பிக்க ரணவக்க ஆகியோர் தாமே ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளராகக் களமிறங்க வேண்டும் என கட்சிக்குள் குடைசல் கொடுத்து வருகின்றார்கள். இவர்கள் சஜித்துக்கு ஆதரவாக எந்தளவுக்கு பணியாற்றுவார்கள் என்பது தெளிவாக இல்லை. அதனைவிட, சஜித் அணியிலிருந்த சிலர் ஏற்கனவே ரணிலின் பக்கம் சென்றுவிட்டார்கள். மேலும் சிலர் ரணிலுடன் இணையலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கு மேலாக சஜித் அணியில் உள்ள மலையக, முஸ்லிம் கட்சிகள் இறுதி வரையில் சஜித்துக்கு ஆதரவாக இருப்பார்களா என்ற கேள்வி உள்ளது.

பொதுஜன பெரமுனையில் காணப்படும் பிளவுகளும், அதில் ஒரு பிரிவினர் ரணிலை ஆதரிக்க விரும்புகின்றார்கள் என்பதும் ரணிலுக்கு சார்பான மற்றொரு விடயம். பொதுஜன பெரமுனவின் தேசிய மாநாடு கடந்த வாரம் கொழும்பில் நடைபெற்றது. சுமார் ஐயாயிரம் பேரை மாத்திரமே கொள்ளக்கூடிய சுகதாஸ உள்ளரங்கில் மாநாடு நடைபெற்றதால், பெருந்திரளான மக்கள் அதில் கலந்துகொண்டதாக "படம்" காட்டப்பட்டது. இதன் மூலமாக கட்சி மீண்டெழுந்திருப்பதாகக் காட்டிக்கொள்ள ராஜபக்ஷக்கள் முற்பட்டார்கள். ஆனால், ராஜபக்ஷக்களிடையேயான முரண்பாடுகளும் இதன் மூலமாக வெளிப்பட்டது.

பொதுஜன பெரமுன ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் என அறிவிக்கப்பட்டுள்ளது. கட்சியின் செயலாளர் இதனை அறிவித்தார். நான்கு பெயர்கள் தற்போது பரிசீலனையில் இருப்பதாகவும் சொல்லப்படுகின்றது. பசில் ஆதரவாளர்களே பொது ஜன பெரமுன ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துவதாகத் தெரிகின்றது. கட்சியின் தலைவராக மீண்டும் தெரிவாகியிருக்கும் மகிந்த ராஜபக்ஷ இவ்விடயத்தில் முரண்படுகின்றார். ரணில் மீண்டும் ஜனாதிபதியாக வர வேண்டும் என்பதுதான் அவரது நிலைப்பாடு. ரணில் அதிகாரத்தில் இருப்பதுதான் தமக்குப் பாதுகாப்பானது என்பது மகிந்தவின் கருத்து.

பொருளாதாரக் குற்றவாளிகள் என உயர் நீதிமன்றமும் ராஜபக்ஷக்களை அடையாளப்படுத்தியிருக்கும் நிலையில், ஜனாதிபதித் தேர்தலில் தமது ஆள் ஒருவரை களத்தில் இறக்கி ரணிலின் வெற்றிவாய்ப்பை பாதிப்பதற்கு மகிந்த விரும்பமாட்டார் என்றே அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன.

இவை அனைத்தும் ரணிலுக்கு சாதகமான விஷயங்கள்.

பலவீனமான விஷயங்கள் எனப் பார்க்கும் போது, அவரது ஐக்கிய தேசியக் கட்சி பரிதாபமான ஒரு நிலையில்தான் இருக்கின்றது. கடந்த பொதுத் தேர்தலில் அவர்களுக்கு ஏற்பட்ட படுதோல்வியிலிருந்து கட்சியை ரணிலால் தூக்கி நிமிர்த்த முடியவில்லை. வரலாற்றில் முதல் தடவையாக எந்தவொரு ஆசனத்தைக் கூட ஐ.தே.க.வினால் கடந்த தேர்தலில் பெற முடியவில்லை. இதனால், கட்சிக் கிளைகள் அனைத்தும் செயலிழந்திருக்கின்றன. நாட்டின் பொருளாதாரத்தை நான் தூக்கி நிமிர்த்துகிறேன் கட்சியை நீங்கள் பார்த்துக்கொள்ளுங்கள் என ரணில் அதற்கான பொறுப்பை தனது லெப்பினன்ட்களிடம் ஒப்படைத்திருக்கின்றார். ஆனால், அவர்களும் அதற்கான வேலைத் திட்டம் ஒன்றை உருவாக்கி செயற்படுவதாக இல்லை.

இந்தப் பின்னணியில்தான் ரணிலை கட்சி சார்பற்ற ஒரு வேட்பாளராக நிறுத்துவதற்கு திட்டமிடப்படுகின்றது.

எவ்வாறாயினும் அவர் வெற்றி பெறத் தேவையான 50 வீதமான வாக்குகளைப் பெறுவதற்கு தமிழ் வாக்குகள் அவசியம். தேர்தல் எதிர்கொள்ளப்படும் நிலையில், இன நெருக்கடிக்கான அரசியல் தீர்வு எதனையும் முன்வைக்க முடியாது என்பது அனைவருக்கும்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# எதற்காக மலையகம் 200?

## எம்.திலகராஜ் செவ்வி

**மலையகம் 200 நிகழ்வுகள் இலங்கையிலும் உலகின் பல பகுதிகளிலும் நடைபெற்று வருகின்றன. இந்த நிகழ்வுகள் மூலமாக எவ்வாறான ஒரு செய்தியை நீங்கள் உலகத்துக்கு கொடுக்க முற்படுகின்றீர்கள்?**

*சுமார் இரண்டாயிரம் ஆண்டு வரலாற்றைக் கொண்ட இலங்கையில் இருநூறு ஆண்டுகளுக்கு முன்னதாக வந்த ஒரு மக்கள் குழுமம் அதன் அரசியல் பண்பாட்டுக் காரணங்களின் அடிப்படையில் இந்த மலையகம் 200 என்கிற நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகின்றது. இது எவ்வாறு உருப்பெறுகின்றது என்றால், 200 வருடங்களுக்கு முன்னதாக மலையகம் என்ற ஒரு சொல்லே இருக்கவில்லை. இந்த 200 ஆண்டுகளில் மலையகம் என்ற சொல்லிற்குப் பின்னால், ஒரு மக்கள் சமூகம், ஒரு புவியியல் பிரதேசம், ஒரு பொருளாதார அடிப்படை, ஒரு பண்பாட்டுக் கூறு, ஒரு இலக்கியச் செல்நெறி, ஒரு மொழி அடையாளம் என பல்வேறு அம்சங்களைத் தாங்கியதாக ஒரு தேசிய இனமாக இவர்கள் இருந்து வந்திருக்கின்றார்கள்.*

*இருந்தபோதிலும் இந்தக் காலப்பகுதியில் இவர்களுக்கு இருக்கக்கூடிய சவால்களை எவ்வாறு எதிர்கொண்டார்கள், அடுத்துவரப் போகும் நூறு ஆண்டு காலத்தில் தமது அடிப்படைகளை எவ்வாறு அமைத்துக் கொள்ளப் போகின்றார்கள் என்பதற்கான பேசு பொருளை உருவாக்குவது என்பனதான் மலையகம் 200 என்ற எண்ணக் கருவின் வெளிப்பாடாக இருக்கின்றது.*

**மலையக மக்களின் உரிமைகளை பெற்றுக் கொடுப்பதற்காக என பல கட்சிகள் சுதந்திரத்துக்குப் பின்னரான காலத்தில் உருவாகியிருக்கின்றன. இவை தமது இலக்கில் எந்தளவுக்கு உறுதியாக இருந்துள்ளன? அதில் எந்தளவு சாதித்துள்ளன?**



**இலங்கையின் பொருளாதாரத்துக்கு முதுகெலும்பாக இருந்து வருகின்ற மலையக மக்கள் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டு 200 வருடங்கள் நிறைவடைவதை முன்னிட்டு, மலையகம் 200 என்ற தொனிப் பொருளிலான நிகழ்வுகள் இலங்கையிலும் உலகின் பல பகுதிகளிலும் நடைபெறுகின்றது. அதன் முக்கியத்துவம் குறித்து நுவரேலியா மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், மலையக அரசியல் அரங்கம் என்ற அமைப்பின் தலைமை இணைப்பாளரும் அரசியல் ஆய்வாளருமான மயில்வாகனம் திலகராஜ் லண்டன் அனைத்துலக உயிரோடைத் தமிழ் தாயக்களம் நிகழ்வுக்காக வழங்கிய நேர்காணலின் முக்கியமான பகுதிகளை இலக்கு வாசகர்களுக்காக தருகின்றோம்.**

*இந்தக் கட்சிகள் உருவாக்கம் தொடர்பாக கடந்த 200 வருடங்களில் பார்ப்போமாக இருந்தால், முதல் 100 ஆண்டுகளும் முற்றுமுழுதாக அடிமைகளாக வைக்கப்பட்டிருந்த சமூகம் என்கின்ற முறையில், அரசியல் ரீதியாக பின்னடைந்த நிலையில்தான் இருந்திருக்கின்றார்கள். ஆனால், அடுத்த நூறு ஆண்டுகளில் மிகுந்த வேகமாக அரசியலில் எழுச்சியடைந்த சமூகமாக வளர்ச்சியடைந்திருக்கின்றார்கள் என்பதுதான் இந்த மக்களின் அரசியல் பலமாகக் கருதப்படுகின்றது.*

*1820 முதல் 1920 வரையில் அடிமைகளாக வைக்கப்பட்டிருந்த ஒரு நிலைமை என்றால், 1920 களில் இவர்களுக்குள் எழுகின்ற அரசியல் எழுச்சி - அது தொழிற்சங்க எழுச்சியின் மூலமாக வருகின்றது. 1931 இல் சர்வஜன வாக்குரிமை இவர்களுக்கு வாய்ப்பைப் பெற்றுத் தருகின்றது. பின்னர் 1948 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் ஏழு உறுப்பினர்களைப் பெற்றுக்கொடுத்தது. இருந்தாலும் 1948 ஆம் ஆண்டு சுதேச அரசாங்கத்தினால் பறிக்கப்பட்ட குடியுரிமை இந்த மக்களை மீளவும் பின்தள்ளி, 30 ஆண்டுகளாக பின்னோக்கி நகர்த்தி நாடற்றவர்களாக்கியது.*

*1977 க்குப் பின்னர் அது சிறிதுசிறிதாக கிடைக்கப்பெற, 1980 க்குப் பின்னர் அமைச்சர் பதவி சார் அரசியல் என்ற ஒரு செல் நெறியைத் தெரிந்தெடுத்து இன்று வரை அந்த அமைச்சுப் பதவி சார்ந்த போக்கில் செல்வதைத்தான் பொதுவாக ஒரு அரசியல் நிலைப்பாடாக பார்க்கலாம்.*

*இதற்குள் இவர்களுடைய பலம், பலவீனம் என்று பார்க்கும் போது, இந்த அடிப்படைச் சமூகமாக இருந்து அரசியல் சமூகமாக மாற்றமடைந்தமையை பெரும் பலமாகப் பார்க்கலாம். பலவீனம் என்று பார்க்கின்ற போது கடந்த 40 ஆண்டு காலத்தில் இவர்கள் முன்னெடுக்கின்ற அமைச்சுப் பதவி சார் அரசியல் - அதாவது அரசாங்கத்துக்கு ஆதரவளித்து அமைச்சர் பதவிகளைப் பற்றுக்கொண்டு உரிமைகளை வெள்றெடுக்கின்ற தந்திரோபாயத்தைப் பொறுத்தவரையில் ஏற்ற இறக்கமான வளர்ச்சிப் போக்கமையத்தான் காட்டி நிற்கின்றார்கள். அதனை மீளாய்வு செய்துகொள்ள வேண்டிய ஒரு காலமாக இந்த "மலையகம் 200" ஐ நாம் பயன்படுத்துவோம்.*

**மலையக மக்களுடைய பிரதான பிரத்தியேகமான பிரச்சினைகள் என்று நீங்கள் எவற்றை அடையாளம் காண்கின்றீர்கள்?**

*இந்த பிரத்தியோக பிரச்சினைகள் என்பது குடியுரிமை பறிப்புடன் வருகின்றது. 1948 இல் இந்த மக்களுடைய குடியுரிமை சுதேச அரசாங்கத்தினால் பறிக்கப்படுகின்றது. 1980 களுக்குப் பின்னர் அது சிறி சிறிதாகக் கிடைக்கப் பெறுகின்றது. 75 வருடகால சுதந்திர வரலாற்றை எடுத்துப் பார்த்தால், முதல் 35 வருட காலம் குடியுரிமை பறிக்கப்பட்டவர்களாக இருந்து அடுத்த 35 வருட காலம் அது சிறுகச் சிறுக வழங்கப்பட்டவர்களாக இருக்கின்றார்கள்.*

*குடியுரிமை பறிப்பு என்பது வெறுமனே வாக்களிக்கும் உரிமையை மட்டும் இல்லாமல் செய்வதென்பதல்ல. அதற்கு அப்பால், ஒரு பிரஜைக்கு ஒரு நாட்டில் இருக்கக்கூடிய அத்தனை உரிமைகளும் சுதந்திரத்துக்குப் பின்னராக 35 முதல் 40 வரையிலான ஆண்டுகளுக்கு இவர்களுக்குக் கிடைக்கப்பெறவில்லை. அரச நிர்வாகப் பொறிமுறையிலிருந்து விலக்களிக் கப்பட்டமை, பிரதேச ஆளுகையிலிருந்து நீக்கம் செய்யப்பட்டமை, கிராம சபைகள் எனச் சொல்லப்படும் அடிமட்ட நிர்வாக முறைகளிலிருந்து நீக்கம் செய்யப்பட்டமை, அரசாங்கத்தினால் வழங்கப்பட வேண்டிய குடிநீர், சுகாதாரம், கல்வி, போக்குவரத்து, மின்சாரம் போன்ற அத்தியவசிய தேவைகளிலிருந்து விலக்களிக்கப்பட்டிருந்தமை. இவை அனைத்தும் சுமார் 40 வருட காலம் இவர்களுக்கு அரசாங்கத்திடமிருந்து கிடைக்காமலிருந்தது.*

*இதற்கு மாறாக இவர்கள் எந்தப் பகுதிகளிலிருந்து தொழில் செய்தார்களோ, அந்தத் தொழிலை நிர்வகித்தவர்களே இவர்களுடைய சமூக நிர்வாகத்தையும் மேற்கொண்டார்கள். இதனால், இந்த மக்களுக்கும் அரச பொறிமுறைக்கும் இடையில் ஒரு வேறுபாடு இருக்கின்றது. இப்போது குடியுரிமை வழங்கப்பட்டுவிட்ட போதிலும் கூட, இந்த அம்சங்களில் நாட்டின் ஏனைய இன மக்களோடு ஒப்பிடும் போது வேறுபாடு காணப்படுகின்றது. உதாரணமாக– பிரதேச செயலகங்கள் என்று சொல்லப்படுகின்ற நிர்வாக முறை இந்த மக்களை முறையாகச் சென்று சேரவில்லை. பிரதேச சபைகளில் இன்னும்*

தொடர்ச்சி 13 ஆம் பக்கம்

# சிறந்த பெண் தொழில் முயற்சியாண்மையாளருக்கான விருதினை பெற்ற

# பெண்மணியின் வெற்றிக் கதை

## பகுதி 2

ஹஸ்பர் ஏ ஹலீம்

“புதிய வகையான தொழில் நுட்பத்தை பெறுவதாயின் சிரமமாக இருந்தாலும் நான் யூடியூப் மூலமாக பல டிசைன்களை பார்த்து அதே மாதிரியாக பைகளை தைத்து வருகிறேன். மேலும் பல பாடசாலை பைகள் ஓடர்களும் கிடைக்கப் பெற்றுள்ளன “ பிஸ்ரியா தனது உற்பத்தி பொருட்களை அதிகமாக சந்தைப்படுத்தக்கூடிய வாய்ப்புக்களை பெற்றுள்ளார். பல கடைகளுக்கும் அனுப்புவதுடன் வெளி இடங்களுக்கும் ஏற்று மதி மூலமாக ஏற்றுமதி செய்தும் வருகிறார். பெண்களுக்கு தேவையான கைப் பை, பாடசாலை பை என பல வடிவங்களில் தனது திறமை மூலமாக பல ரூபாக்களை இலாபமாக ஈட்டி வருகிறாள்.



அரச துறையில் தம்பலகாமம் பிரதேச செயலகம் ஊடாக தேவையான வழிகாட்டல்களை பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.பாமினி மற்றும் விதாதா வள நிலைய உத்தியோகத்தர்கள் வழங்கி வருகின்றனர். உற்பத்தி திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர் மூலமாக துணி கழிவுகளை கொண்டும் சிறிய வளங்களை பயன்படுத்துவது தொடர்பிலும் திறம்பட தனது சுயதொழிலை முன்னெடுத்து வருகிறார். கழிவுகளை வைத்து வர்ணமயமான பூசாடிகள் என பல தயாரிப்புக்களை செய்து சூழல் மாசுபடாத வகையில் உற்பத்தி துறையை முன்கொண்டு செல்லும் அளவுக்கு அரச துறை பங்களிப்பு இந்த பெண்மணிக்கு ஒரு பக்கபலமாக அமைகிறது. குறித்த பிரதேசத்தில் முதலிடத்தில் உற்பத்தி சுயதொழில் முன்னேற்றம் ஊடாக வளர்ச்சி கண்ட பெண்ணாக இந்த பெண் மணி மாத்திரமே உள்ளார்.

தன்னகத்தே பல திறமைகளை கொண்ட பிஸ்ரியா தினமும் மதக் கடமைகளை முடித்து விட்டு இறைவனின் நம்பிக்கையோடு தனது மேலதிகமான தொழிலான வளவாளர் பயிற்சியை நிறைவேற்ற செல்வதுமுண்டு. இதனால் சில வேலைகளில் தனக்கு சோர்வான மன நிலை ஏற்படுவதாகவும் அதிக வெப்ப நிலையினால் களைப்பு தலைவலி போன்றன ஏற்பட்டாலும் அதையும் பாராது தொழிலில் முன்னேற வேண்டும் என நினைப்பவள்.

“இந்த துறையில் நான் மேலும் முன்னேறி எனது கனவுகளை நிறைவேற்றுவேன் பெண் என்றால் தனித்துவமான என்றல்ல “



பல கனவுகளோடு வாழும் இந்த பெண் தனது சுயதொழில் மூலமான முயற்சிகள் தொடர்ந்தும் நிறைவேற வேண்டும் என்பது தனது பிள்ளைகளின் ஆசைகளாக இருப்பது என்பதும் எதிர்பார்க்கப்படுகிறது. “கொரோனா மற்றும் பொருளாதார நெருக்கடியால் நான் மன முடையவில்லை. சந்தைப்படுத்தல் குறைவாக இருந்தது. நாடு முடக்கப்பட்டது. இதனால் பாரிய விற்பனை வீழ்ச்சி கண்டிருந்தது இது ஒரு பக்கம் இருக்க மீண்டும் எனது உற்பத்திகளை சேமித்து வைத்திருந்தேன். மொத்தமாக எல்லா நெருக்கடிகளில் இருந்தும் மீளவும் உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்தி ஒரு ஜூகி இயந்திரம் அந்த இலாபத்தில் இருந்தே வாங்கினேன் “ எனவும் பிஸ்ரியாவின் நெருக்கடி நிலமைகளின் போதான தனது அனுபவங்களை இவ்வாறு பகிர்ந்து கொண்டார்.

தனது இளவயதில் பாடசாலை செல்லும் காலத்திலும் தனது எதிர்காலம் பற்றிய சிந்தனை பலதும் தனக்குள் இருந்தது இருந்த போதிலும் பெண்கள் மென்மையானவர்கள் அரச தொழில் மாத்திரம் தான் கிடைக்க வேண்டும் என வாழ்ந்தாலும் அரச தொழில் இல்லாவிட்டாலும் சொந்த முயற்சியில் சொந்த காலில் நின்று வாழ்க்கை எனும் பாதையை தனக்காக அமைத்துக் கொண்டாள். இவரது கணவரின் பக்க பலத்துடன் ஆரம்பித்த குறித்த தொழில் முயற்சி தற்போது பாரிய வளர்ச்சி கண்ட நிலையில் முதலாளியாக மாறியிருக்கிறார் இந்த பெண்மணி.



நாட்டின் அபிவிருத்தியில் பெண்களின் பங்களிப்பும் ஒன்றாக காணப்படுகிறது என்பதற்கு இவரும் ஒரு முன்னுதாரணமாக திகழ்கிறார்.

“தற்போது எனக்கு நேரம் கிடையாது தினமும் வெளியில் பல பயிற்சிகளை கூட வளவாளராக சென்று நடாத்துகிறேன் வீட்டுக்கு வந்தால் வீட்டு வேலை ஆனால் தனிமரமாக நின்று உழைத்து சாதித்து காட்ட வேண்டும் “ என ஒரு புன்னகையுடன் தனது வார்த்தையை வெளிப் படுத்தினார்.

நல்லதொரு சுறு சுறுப்பான புன்னகையுடன் பேசக் கூடிய இவர் போன்ற பெண்மணி நம் நாட்டுக்கும் கிடைத்திருப்பது ஒரு வரப்பிரசாதமாக காணப்படுகிறது.

“செய்யும் தொழிலே தெய்வம் என்பார்கள்” அது போன்று கடமை கட்டுப்பாடு என மழை காற்று வெயில் என பாராது தினமும் தனக்கான ஒரு தனியிடத்தை பிடித்து தொழிலதிபராக மாறியுள்ள இப் பெண்மணி மூலம் நாமும் நிறையவே கற்க வேண்டியுள்ளது.

இளவயதில் இது போன்ற தொழில் முயற்சியாண்மையாளராக சிறப்பாக இங்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளார். பல ஆயிரக்கணக் கான பை உற்பத்திகளை மேற்கொண்டு தொழிலை திறம்பட செய்து வருகிறார்.



குடும்பம் பிள்ளைகள் என இருந்த போதிலும் பல மணி நேரங்களை தனது தொழில் வாண்மையான கடமைகளுக்காக செலவிட்டு வருகிறார். தொழிலையும் கல்வியையும் இரண்டரக் கலந்து தனது முயற்சியினால் முன்னேற்றமடைந்து சாதனைப் பெண்ணாக மாறியுள்ளார். இதற்கு கடந்த காலம் வரலாறு சாட்சி சொல்லும்.

“ என்னால் வீட்டில் சும்மா இருக்க முடியாது ஆறு மாதம் சும்மா இருந்தேன். கணவருக்கு தொழில் செய்ய விருப்பமில்லை. அதையும் தாண்டி கணவரின் உதவியுடன் ஒரு மாதத்தில் தொழிலை கற்று தற்போது வளர்ச்சி கண்டுள்ளேன் “ என தொழில் ஆர்வம் பற்றியும் முன்னைய நினைவு களை மீட்டிக் கொண்டார்.

அரசாங்க உதவியை மாத்திரம் நம்பி விடாது முயற்சி மூலம் பல ரூபாக்களை இலாபமாக இது போன்ற தொழில் மூலமாக நன்மையடைந்து வந்து தனது குடும்பத்தை பொருளாதார ரீதியாக கவனிக் கும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

வங்கியில் கடனுக்காக விண்ணப்பம் செய்த போதும் அது நிராகரிக்கப்பட்டாலும் தொழிலை மேலும் வளர்ச்சிப் பாதைக்கு இட்டு

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# அழுத்தங்கள் இல்லையெனில் யாரும் போராட்டங்களை கவனத்தில் எடுப்பதில்லை

மட்டு.நகரான்

வடகிழக்கு மாகாணம் தமிழ் தேசியம் சார்ந்து செயற்படுவதன் ஊடாக மட்டுமே தமது இருப்பினை பாதுகாத்துக்கொள்ளமுடியும். தமிழர்கள் தமிழர்களாக தமது இருப்பினை பாதுகாத்து முன்கொண்டுசெல்வதற்கு தமிழ் தேசியம் என்ற கவசம் மிகவும் இன்றியமையாத விடயம் என்பதை இன்று கிழக்கு மாகாண மக்கள் புரிந்துகொண்டுவரும் நிலைமையினை காணமுடிகின்றது.



ஒன்றுபட்ட தமிழ் தேசிய கொள்கையுடன் பயணிக்கும்போதே கிழக்கின் இருப்பு என்பது பாதுகாக்கப்படும் என்பதை நாங்கள் கடந்த காலத்தில் பல தடவைகள் வலியுறுத்தியிருக்கிறோம். அதற்கான கட்டமைப்புகள் உருவாக்கப்படவேண்டும் என்பதையும் வலியுறுத்தியே வந்திருக்கின்றோம். அவ்வாறான ஒரு கட்டமைப்பின் தேவை என்பதை அனைவரும் உணர்ந்திருக்கின்ற போதிலும் கிழக்கில் அதற்கான முன்னெடுப்புகளை முன்னெடுப்பதற்கு கழுத்தில் யார் மணி கட்டுவது என்ற நிலையே காணப்படுகின்றது.

இன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் நூறாவது நாளையும் தாண்டிய நிலையில் கால்நடை பண்ணையாளர்களின் போராட்டம் நடைபெற்றுவருகின்றது.இந்த போராட்டத்தினை வெறுமனே பண்ணையாளர்கள் மட்டுமே நகர்த்திச் செல்லும் நிலைமை காணப்படுகின்றது.இந்த நிலைமை கிழக்கினைப்பொறுத்த வரையில் மிகவும் பலவீனமான விடயமாகவே காணப்படுகின்றது.

கிழக்கு மாகாணத்தினைப்பொறுத்த வரையில் தொடர்ச்சியாக தமிழர்களின் இருப்பு என்பது கேள்விக்குறியாகவேயிருந்துவருகின்றது.

கிழக்கில் தமிழர்கள் சிறுபான்மையினராக மாற்றமடையும் நிலைமை வேகமாக ஏற்பட்டுவருகின்றன.அண்மைக்காலமாக வெளி நாடுகளுக்கு புலம்பெயரும் நிலைமை அதிகளவில் தமிழ் மக்கள் மத்தியிலேயே காணப்படுகின்றது. சராசரியாக மாதம் ஒன்று நூறுபேராவது கிழக்கிலிருந்து புலம்பெயரும் நிலைமையானது தமிழர்களின் இருப்பினை இன்னும் கேள்விக்குட்படுத்தும் நிலைமையே காணப்படுகின்றது.



இந்த நிலைமை கிழக்கினைப்பொறுத்த வரையில் தமிழ் தேசிய அரசியலும் தமிழர் அரசியலிலும் பாரிய மாற்றத்தினை ஏற்படுத்தும். கிழக்கில் தமிழ் தேசிய அரசியலை தமிழ் மக்கள் தொடர்ச்சியாக கடைப்பிடித்துவந்தார்கள்.எனினும் கடந்த பாராளுமன்ற தேர்தலில் தமிழ் தேசிய அரசியல் கிழக்கில் சரிவு நிலையினைக்கண்டது. காரணம் தமிழ் தேசிய அரசியலில் பயணித்துள்ள அரசியல் கட்சிகளின் செயற்பாடுகள் தமிழ் மக்கள் மத்தியில் விரக்தி நிலைமையினை ஏற்படுத்தியிருந்தது.

இதன் காரணமாகவே பிள்ளையான் போன்றவர்கள் வெற்றிபெறும் நிலைமையினை ஏற்படுத்தியிருந்தது.அபிவிருத்தி அரசியலை நோக்கி கிழக்கு தமிழர்கள் நகரும் நிலைமையினை ஏற்படுத்தியிருந்தது.கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்க வேண்டும், அது தமிழ் தேசிய அரசியலில் கிடைக்காத நிலையிலேயே மாற்று அரசியலை தேர்வுசெய்யும் நிலைமை தமிழர்களுக்கு ஏற்பட்டது.

எனினும் இன்றைய நிலைமையில் தமிழ் தேசிய அரசியலில் அதிருப்தியிருந்தாலும் அபிவிருத்தி அரசியல் என்பது தமிழர்களின் இருப்பினை ஒருபோதும் உறுதிப்படுத்தாது என்பதை இன்று கிழக்கு மாகாண தமிழர்கள் நன்கு உணர்ந்திருக்கின்றார்கள்.இன்று அபிவிருத்தி அரசியல்,கிழக்கு மீட்பு என்ற கோசங்களுடன் தமிழர்களின் வாக்குகளை கபளீகரம் செய்தவர்கள் இன்று சிங்கள பௌத்த இனவாதிகளுக்கு சாமரம் வீசுவதிலும் தமது பைகளை நிரப்புவதிலும் கண்ணும் கருத்துமாகயிருக்கின்றனர்.



கிழக்கு மாகாணத்தில் அதுவும் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் தேசியம் சார்ந்த செயற்பாடுகளை சிதைப்பதற்கும் தமிழர்களின் போராட்ட உணர்வுகளை சிதைத்து இளம் சமூகத்தின் மத்தியில் தமிழ் தேசியத்திற்கு எதிரான உணர்வுகளை விதைப்பதற்குமான தீவிர முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.அதற்காக பிள்ளையானுக்கு முழுமையான வேலைத்திட்டங்கள் வழங்கப்பட்டு களமிறக்கப்பட்டுள்ளதை காணமுடிகின்றது.

உயிர்த்த ஞாயிறு குற்றச்சாட்டுகள் தொடர்பான ஆதாரங்கள் வெளிவந்த நிலையில் அவற்றினை மூடிமறைப்பதற்காகவும் தமிழ் தேசியம் சார்ந்த செயற்பாடுகளை இல்லாமல் செய்வதற்கும் திட்டமிட்ட வகையிலான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு பிள்ளையானுக்கு வழங்கப்பட்டு மட்டக்களப்பில் வீதி அபிவிருத்தி என்ற ரீதியில் ஒரு கல்லில் இரண்டு மாங்காய்களை அடிக்கும் செயற்பாட்டினை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது.வீதி அபிவிருத்தி என்ற ரீதியில் மக்களை தமது அபிவிருத்தி அரசியலுக்குள் கொண்டுவருவது,தமது சகாக்களை உழைக்க வைப்பது,உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் பிள்ளையான் மீதான குற்றச்சாட்டுகள் குறித்து மக்கள் மனதிலிருந்து மறைய வைப்பது. இவற்றினை செய்யலாம் என்பதற்காகவே வீதி அபிவிருத்தி என்ற பெயரில் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் தமிழ் மக்களுக்கு இவர்கள் மீது கடுமையான நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தியுள்ளது.

வீதி அபிவிருத்தி என்ற ரீதியில் முன்னெடுக்கப்படும் செலவினங்கள் என்பது நல்லாட்சிக்காலத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கி கடனுதவியில் வழங்கப்பட்ட நிதியில் கடந்தகாலத்தில்மட்டக்களப்புமாவட்டத்திற்கென வீதி அபிவிருத்திக்காக தமிழ் தேசிய கூட்டமைப்பின் வேண்டுகோளுக்கு அமைவாக ஒதுக்கப்பட்ட நிதியாகும்.ஆட்சிமாற்றத்தின்பின்னர்கோத்தபாய அரசினால் அந்த திட்டங்கள் அனைத்து நிறுத்தப்பட்டு நிதிகள் மீளபெறப்பட்ட ஒரு இலட்சம் வீதி அபிவிருத்தி திட்டம் மற்றும் கிராமிய வீதி அபிவிருத்தி திட்டம் என்ற பெயரில் முன்னெடுக்கப்பட்ட திட்டங்களே இன்று பிள்ளையானால் முன்னெடுக்கப்படுகின்றன.

இவ்வாறான நிலையிலேயே கிழக்கில் தமிழ் தேசிய அரசியலை முன்னிறுத்துவதற்கான சிவில் சமூக அமைப்பின் கட்டமைப்பின் அவசியம் உணரப்படுகின்றது.இன்றைய நிலையில் கிழக்கில் செயற்படும் சிவில் சமூக கட்டமைப்புகளானது ஒரு புறம் அரசின் கைக்கூலிகளாக செயற்படுகின்றன அல்லாது விட்டால் அரசசார்பற்ற நிறுவனங்களின் கைக்கூலிகளாகவும் தமது பைகளை நிரப்பும் கைக்கூலிகளாகவும் செயற்படுகின்றன.

உண்மையில் கிழக்கு மாகாணத்தினைப் பொறுத்த வரையில் தற்போது செயற்படும் சிவில் சமூக அமைப்புகள் குறித்து எழுதவேண்டிய தேவையுள்ளது.காரணம் இன்று கிழக்கில் தமிழ் தேசியம் சார்ந்து தமது செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு எந்த சிவில் அமைப்பும் இல்லையென்ற நிலைமையே காணப்படுகின்றது. இங்கு காணப்படும் அமைப்புகள் வலிந்து காணாமல்ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டம், கால்நடை பண்ணையாளர்களின் போராட்டம்,



முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் மற்றும் அதன் சார்ந்த போராட்டங்களை காட்டி தமது வயிறு வளர்க்கும் செயற்பாடுகளை முன்னெடுக்கின்றார்களேதவிர இவ்வாறான போராட்டங்களை மக்கள் மயப்படுத்தி மக்கள் ஆதரவினை திரட்டும் செயற்பாடுகளை ஒருபோதும் முன்னெடுப்பதில்லை.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை போராட்டம் ஆரம்பித்த காலம் தொடக்கம் இன்றுவரையில்இவ்வாறானவர்களின்செயற்பாடுகளே காணப்படுகின்றது.இந்த தரப்பினர் மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகளில் ஒரு போதும் கலந்துகொள்ளமாட்டார்கள்.அரசசார்பற்ற நிறுவனங்கள்அதிலும்தமிழர்கள்போராட்டத்தினை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாத அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் அதன் பிரதிநிதிகளுடன் அதிகளவான செயற்பாடுகளை முன்னெடுக்கும்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# தோட்டங்களும் கிராமங்களும்

துரைசாமி நடராஜா

இலங்கையின் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் நாட்டின் தேசிய வருமானத்தில் காத்திரமான பங்களிப்பினை வழங்கி தேசத்தின் முதுகெலும்பாக இருந்து வருகின்றனர். எனினும் இவர்களின் நலனோம்பு நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்கமோ அல்லது கம்பனியினரோ எந்தளவு கரிசனையுடன் செயற்படுகின்றார்கள் என்பது கேள்விக்குரிய ஒரு விடயமாக உள்ளது. தொடர்ச்சியாகவே அம்மக்களின் நலன்கள் புறக்கணிக்கப்பட்டு வருகின்ற நிலையில் இம் மக்கள் சொல்லொணா துயரங்களை அனுபவித்து வருகின்றனர்.

இந்நிலையில் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான தொழில்சார் உரிமைகளையும் அவர்களுக்கான நலன்புரி விடயங்களையும் பாதுகாப்பதற்கு தனியானதொரு சட்டம் இயற்றப்பட வேண்டும் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் அமைச்சருமான ஜீவன் தொண்டமானால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு தொழில் அமைச்சின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றுள்ளதாக அறிய முடிகின்றது. இது ஒரு சிறப்பம்சமாகும் என்பதோடு இதன் சாதக விளைவுகளை தொழிலாளர்கள் பெற்றுக் கொள்ள பேதங்களை மறந்து சகலரும் ஒன்றுபட்டு குரல்கொடுக்க வேண்டியது அவசியமாகும்.



19 ம் நூற்றாண்டில் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் இந்நாட்டிற்கு அழைத்துவரப்பட்டு மலைப்பாங்கான இடங்களில் குடியமர்த்தப்பட்டனர். ஆரம்பகாலத்தில் இம்மக்கள் பல்வேறு தரப்பினராலும் புறக்கணிக்கப்பட்ட ஒரு சமூகமாக இருந்ததோடு இம்சைகளுக்கும் உள்ளாகினர். மேலும் கூலிகள், கள்ளத்தோணிகள், வடக்கத்தையார், தோட்டக் காட்டார், இந்தியக்காரர் என்றெல்லாம் அழைக்கப்பட்டு அவமதிக்கப்பட்டுமுள்ளனர்.

எனினும் சமகாலத்தில் நிலைமைகள் மிகவும் வேகமாக மாறிக்கொண்டு வருகின்றன. தமிழ்த் தொழிலாளர்களின் துயரங்களும், இன்னல்களும் சுரண்டல் கொடுமைகளும் துயரங்களாகிக் கொண்டிருக்கின்றபோதிலும் கூட, தோட்டத்தொழிலாளர் மத்தியில் நாம் இதுவரை கண்டிராத அளவிற்கு விழிப்பும், எழுச்சியும், உரிமை வேட்கையும் முன்னேற்றமும் அதிகரித்து வருவது கவனிக்கத்தக்கதென்று கலாநிதி க.அருணாசலம் ஏற்கனவே சுட்டிக் காட்டியுள்ளமை நோக்கத்தக்கதாகும். இதுவொரு வரவேற்கத்தக்க விடயமாகும் என்பதனை மறுப்பதற்கில்லை.

பெருந்தோட்ட தொழிலாளர் இந்நாட்டில் குடியேற்றப்பட்ட ஆரம்ப காலங்களில் அவர்களுக்கான நலனோம்பு திட்டங்களில் உரிய கவனம் செலுத்தப்படவில்லை. அவர்களின் உழைப்பை உறிஞ்சுவதை மட்டுமே குறியாகக் கொண்டிருந்த நிர்வாகத்தினர் பல்வேறு உரிமை மீறல்கள் இடம்பெறுவதற்கும் காரண கர்த்தாவாக இருந்தனர். உழைப்பு என்ற ஒன்றைத் தவிர வேறெதுவும் அவர்களிடம் இருந்து எதிர்பார்க்கப்படவில்லை.

இதேவேளை 'தோட்ட மக்கள் தமது அன்றாட தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கு முற்றுமுழுதாக தோட்ட முறைமையிலேயே தங்கி இருக்கும் நிலை அங்கு காணப்படுகின்றது. வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படை வசதிகள் அனைத்தும் தோட்ட எல்லைக்குள்ளேயே தனியொரு அமைப்பின் கீழ் வழங்கப்படுவதால் இவை சுயதேவைகளை பூர்த்தி செய்யும் அலகுகளாக விளங்குகின்றன. இதன் காரணமாக அவற்றை பூரணத்துவ தன்மை கொண்ட அமைப்புக்களென்று கருதுவது பொருத்தமானதேயாகும். வாழ்க்கையின் வேறுபட்ட மூன்று கூறுகளாகிய தொழில், வாழ்க்கை முறை, பொழுதுபோக்கு என்பவற்றுக்கு இடையிலான தடைகள் இங்கு உடைத்தெறியப்படுகின்றன. இதனால் இவை முற்றிலும் பூரணத்துவம் வாய்ந்தனவாக இல்லாதபோதும் அவ்வாறு கருதுவது ஏற்கக்கூடியதே 'என்று ஹொல்லப் என்ற அறிஞர் தெரிவிக்கின்றார்.

### தொழிற்சட்டங்கள்

தோட்டத் தொழிலாளர்களின் நலன்கருதி சுகாதார வசதிகள், பிரசவ விடுதி, வீட்டுவசதி என்பன செய்துகொடுக்கப்பட்ட நிலையில் இவ்வசதிகள் குறைந்தமட்டத்திலேயே காணப்பட்டன. இதனால் போஷாக்கின்மை மற்றும் பல நோய் நொடிகளுக்கும் தொழிலாளர்கள் உள்ளானார்கள். சிசு மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களும் போஷாக்கின்மை தொடர்பில் அதிகரித்த பாதிப்பினை எதிர்நோக்கி இருந்தனர். இந்நிலையிலேயே தொழிலாளர்களின் நலன்பே ணும் பல சேவைகளையும் உறுதிப்படுத்துவதற்கு சட்டங்கள் பலவும் உருவாக்கப்பட்டன.



தொழிற்சட்டங்களும் இதில் உள்ளடங்கும். இந்த வகையில் முதலாவது கட்டளைச் சட்டமாக 1841 ம் ஆண்டு 5 ஆம் இலக்கம் கொண்ட 'கூலி மற்றும் சேவைகள் ஒப்பந்த கட்டளைச் 'சட்டமானது விளங்குகின்றது. இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் கண்காணிமார்கள் என்று அறிமுகப்படுத்தப்பட்ட தோட்டத் தொழிலாளர்களை வழங்கும் முகவர்கள் மூலமாக வெள்ளை இன தோட்ட உரிமையாளர்களுக்கு அல்லது துரைமார்களுக்கு இந்தியாவிலிருந்து தொழிலாளர்களை கொண்டு வரக்கூடியதாக இருந்தது. 1958 ம் ஆண்டின் 15 ம் இலக்க ஊழியர் சேமலாப நிதிச் சட்டம், 1980 ம் ஆண்டின் 46 ம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டம் என்பனவும் தொழிற்சட்டங்களில் குறிப்பிடத்தக்கனவாக விளங்குகின்றன.

1865 ம் ஆண்டு சேவை ஒப்பந்த சட்டம் முக்கியத்துவம் மிக்கதாகும். வைத்தியசாலைகளில் இறப்போரின் வீதம் ஏனைய சமூகங்களுடன் ஒப்பிடுகையில் பெருந்தோட்ட சமூகத்தினரிடையே அதிகரித்து காணப்பட் டது. இந்நிலையில் சுகவீனமுற்றுள்ள காலப்பகுதியில் அவர்களுக்கு இருப்பிட வசதி, உணவு, வைத்திய வசதி போன்ற குறைந்தபட்ச வசதிகள் செய்து கொடுக்கப்படுவதை இச்சட்டம் வலியுறுத்தியது. 1984 ம் ஆண்டு 14 ம் இலக்கச் சட்டம்



தொழிலாளர்களின் சமூக நலனிற்கு தொழில் வழங்குநரே பொறுப்பு என்பதனை வலியுறுத்தியது.

தொழிலாளருக்கான மருத்துவ நலன் திட்டங்களை நிதிப்படுத்துவதற்கும் முகாமை செய்வதற்கும் அரசாங்கமே பொறுப்பென தோட்டக் கம்பனிகள் வாதிட்டு வந்த நிலையில் 1880 ம் ஆண்டு 17 ம் இலக்க மருத்துவ தேவைகள் சட்டத்தின் கீழ் அரசாங்மே இப்பொறுப்பை ஏற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். 1912 ம் ஆண்டு 9 ம் 10 ம் இலக்க மருத்துவ உதவிச் சட்டங்கள் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் முக்கியத்துவம் வாய்ந்த உதவிச்சட்டங்களாக விளங்குகின்றன. இச்சட்டம் முதன்முறையாக ஒரு வயதிற்குக் குறைந்த பிள்ளைகளின் முறையான பராமரிப்பு, போஷாக்கு என்பவற்றிற்கு தோட்ட முகாமை யாளரே பொறுப்பு என விதித்தது. மேலும் தோட்டங்களில் காணப்படும் சுகாதார வசதிகளையும் தோட்ட மக்களுக்கான சமூக நலன் வசதிகளையும் அரசாங்க மாவட்ட வைத்திய அதிகாரிகள் மேற்பார்வை செய்வதற்கும் இச்சட்டம் வழிவகுத்தது. அத்தோடு தோட்டங்களில் மலசல கூடங்களை அமைப்பதற்கும், வடிகாலமைப்புக்களை திருத்துவதற்குமான சட்டவிதிகளை உருவாக்குவதற்கும் இது அனுமதியளித்தது.

1907 ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட 8 ம் இலக்க ஆரம்ப கல்விச் சட்டம் தினமும் குறைந்தது இரண்டு மணி நேரமாவது பிள்ளைகளுக்கு ஆரம்பக்கல்வி புகட்டுவதை கட்டாயமாக்கியது. இதேவேளை 1920 ம் ஆண்டு கல்விச் சட்டம் தோட்டங்களில் ஆரம்பப் பள்ளிகள் நடத்தப்படு வதை கட்டாயமாக்கி இருந் தது. 1941 ம் ஆண்டு பிரசவ நன்மைகள் சட்டம் கொண்டு வரப்பட்டது. இதனால் சாதக விளைவு களை ஓரளவு தொழிலாளர்கள் பெற்றுக் கொள்ள கூடியதாக இருந்தது.



1969 இல் தேசிய மரண விகிதம் 1000 இற்கு 8 ஆகவிருந்த நிலையில் பெருந்தோட்டத்தில் இது 12 ஆகக் காணப்பட்டது. 1982 இல் நுவரெலியா மாவட்டத்தில் பிரசவ மரண விகிதம் 1000 இற்கு 1.8 வீதமாக இருந்தது. 1985 ம் ஆண்டின் பிரசவ சலுகைகள் திருத்தச் சட்டம் பிரசவ சகாயங்கள் பலவற்றையும் பெற்றுக் கொடுத்தது. இச்சட்டம் பிரசவ காலத்தில் ஊதியத்துடன் கூடிய 12 வாரகால விடுமுறைக்கு வித்திட்டதோடு, கர்ப்பமுற்ற ஆறாம் மாதத்திலிருந்து அதிக உயரமற்ற இடங்களில் வேலை கோரும் உரிமையை

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# இயற்கையையும் உயிர்களையும் நேசித்த பாரதி இதுவே பாரதியின் விடுதலையுணர்வாகியது

## இலண்டன் அகரம் செந்தமிழ் 15. 12. 23 மெய்நிகர் பாரதிவிழா உரை

மகாகவி பாரதிக்கு 11.12.2023 இல் அகவை 141. பாரதியை 1921 இல் காலமாகிய பின்னர் இன்று வரை 102 ஆண்டுகள் தமிழர்கள் நினைந்திட வைப்பது அவனின் விடுதலை உணர்வு மிக்க பாடல்களே. பாரதியின் இந்த விடுதலை உணர்வுக் கவிதைகளின் மூலமாக அமைந்தது அவனது இயற்கை மேலானதும் உயிர்கள் மேலானதுமான நேசிப்பு என்றால் மிகையாகாது

*காலை இளவெயிலின் காட்சி-அவள்*
*கண்ணொளி காட்டுகின்ற மாட்சி*
*நீல விசும்பினிடை இரவில்-சுடர்*
*நேமி யனைத்து மவள் ஆட்சி*

எனக் காலை இளவெய்யிலையும் மாலை நிலவொளியையும் ஆதிபராசத்தியின் மாட்சியாகவும் ஆட்சியாகவும் கண்டவன் பாரதி. இயற்கையை நேசிக்கும் பாரதியின் பேராற்றல் இயற்கையை முன்னிறுத்தி கடவுள் கோலத்தை மனதிருத்தும் திருவருள் பெருக்கு உள்ளவனாக மாறி

*மூர்த்திகள் மூன்று பொருள் ஒன்று-அந்த*
*மூலப்பொருள் ஒளியின் குன்று*
*நேர்த்தி திகழும் அந்த ஒளியை எந்த*
*நேரமும் போற்று சத்தி என்று*

என அகவிருளும் புறவிருளும் அகற்று பேராற்றல் கடவுள் அதனை மும்மூர்த்திகள் என்றாலும் மூவொரு கடவுளே உண்மை என்று கடவுள் குறித்த மெய்ப்பொருள் சொன்ன பாரதி அந்த அனைத்திலும் உள்ள மூலப்பொருள் ஒளியின் குன்று என்று ஒளிவடிவாக கடவுளைக் காட்சிப்படுத்திட உதவியது அவனின் இயற்கை மேலான நேசிப்பே. கடவுள் ஒளியாக கட்புலக்காட்சியாகுகையில் அது நேர்த்தியான ஒளியாகத் தன்னை வெளிப்படுத்துகையில்தான் கண்ணால் அதனைப் பார்க்க முடியும். சோதியைக் கண்பார்க்கக் கூசும் கண்மூடிக் காண்கின்ற கடவுள் நிலை அது. அதனையே சூரிய சந்திர இரு சுடர்களாக கண் பார்க்கையில் ஒளியை இருளகற்றும் நிலைத்த சத்தியாகவும் அனைத்தையும் இயக்கப்படுத்தும் இயக்கசத்தியாகவும் ஒரே நேரத்தில் கட்புலக் காட்சியாக உணர்கையிலேயே நிலைத்த பேராற்றல் சிவம் எனவும் அதன் உடனுறை இயக்கப் பேராற்றல் சத்தி எனவும், சொற்பதம் கடந்த சோதி வானவனான கடவுளை இரண்டல்ல என்ற நிலையில் உள்ள ஒருமையில் இருமை என மெய்யுணரும் தன்மையை உயிர் பெறுகிறது. இதனை மேலும் விரித்து ஆராய்கையில் இறைவன் இருசுடராகவும் ஐம்பூதங்களாகவும் உயிர்களாகவும் இருப்புக் கொண்டுள்ள இறையாட்சியின் தன்மை விளங்கிறது. "நேர்த்தி திகழும் அந்த ஒளியை எந்த நேரமும் போற்று சத்தி" என்று பாரதி தனது இயற்கை மேலான நேசிப்பின் வழி சத்தியாகக் கடவுளின் இயக்கவாற்றல் உலகிலும் உயிர்களிலும் ஒன்றாயும் உடனாயும் வேறாயும் இருக்கும் இறைவன் என்ற நிலையைத் தெளிவாக்குகிறது. இவ்வளவு இலகுவாக இறைவனை தமிழால் அகத்திருத்தும் பாரதியின் மொழியாற்றலின் அடித்தளம் அவன் இயற்கையை நேசித்தமையே ஆகும்.

இறை தத்துவத்தில் மட்டுமல்ல பாரதியின் விடுதலை எண்ணத்திலும் அவனின் இயற்கையையும் உயிர்களையும் நேசிக்கும் மனநிலையே அவனுக்கான தேசியவிடுதலை குறித்த அறிவின் தெளிவை ஞானத்தை அளித்தது எனலாம். விடுதலையை அவன் இயற்கையில் இருந்தே கற்றுக்



கொண்டான் இதற்குச் சிறந்த உதாரணமாக விளங்குவது பாரதியின்விடுதலை - சிட்டுக் குருவி என்ற பாடல். இப்பாடலில் பாரதி விடுதலையை சின்னஞ்சிறு குருவியின் வாழ்வியலில் அவனின் இயற்கையின் இரசிப்பின் பின்னணியில் தருகின்றான். "விட்டு விடுதலையாகி நிற்பாயிந்தச் சிட்டுக்குருவியைப் போலே" என்று பல்லவி அமைத்த பாரதி மூன்று சரணங்களில் சிட்டுக்குருவியின் அன்பிய வாழ்க்கை மானிட விடுதலைக்கான மாண்புறு காட்சியாவதைக் கவிதையாக்குகின்றான்.

முனைவர்
நீற்றா பற்றிமாகரன்

*எட்டுத் திசையும் பறந்து திரிகுவை*
*எறியக் காற்றில் விரைவொடு நீந்துவை*
*மட்டுப்படாதெங்கும் கொட்டிக் கிடக்குமிவ்*
*வானொளியென்னும் மதுவின் சுவையுண்டு*

என்னும் முதலாவது சரணமே பாரதிக்கும் இயற்கைக்கும் இடையிருந்த பிரிக்கப்பட முடியாத உள்ளவொன்றிப்பின் தன்மையை மட்டுமல்ல சுதந்திர மனஉணர்வும் கடும் உழைப்புக்கான உறுதியும் இயற்கையே மட்டுப்படுத்தப்பட முடியாத அளவுக்கு இறையிருப்பு என்னும் வானொளியைத் தன்னகத்தே கொண்டிருப்பதால் அதனை ஏற்று எந்தத் துன்பத்தையும் துயரத்தையும் வென்று வாழும் வாழ்வுதான் விடுதலை இன்பம் எல்லாக் கவலையையும் மறக்கச் செய்யும் வாழ்வுக்கான மதுச்சுவை என்னும் எல்லா இருளையும் கடக்க வைக்கும் ஒளிவாழ்வு தரும் மதுச்சுவை என்கின்ற சத்தியளித்தல் ஒவ்வொருவரும் புது வாழ்வுக்குச் செல்வதற்குத் துணிவு தரும் ஆற்றல் என்பதனை மிக அழகாக எடுத்துரைக்கின்றது.

*அடுத்த சரணமான*
*பெட்டையிலோடின்பம் பேசிக் களிப்புற்றுப்*
*பீடையிலாதோர் கூடு கட்டிக் கொண்டு*
*முட்டை தருங் குஞ்சைக் காத்து மகிழ்வெய்தி*
*முந்த வுணவு கொடுத்தன்பு செய்திங்கு*

என்பதில் கலந்து பேசி மகிழ்ந்து துன்பமில்லாதோர் வாழ்வு அமைத்திடல் தலைவனுக்கும் தலைவிக்கும் குடும்ப வாழ்வின் அடித்தளமாக அமைய வேண்டுமென்று அடித்துக் கூறி அந்த மகிழ்ச்சி வாழ்வில் வரும் பிள்ளைகளும் மகிழ்வாக வாழ்வதற்கான அத்தனையும் செய்து பிள்ளைகளுக்கான உயிர்வாழ்வுக்கான அத்தனை யும் அவர்கள் கேட்குமுன்பே செய்து அன்பு வாழ்வு வாழ்தலே விடுதலை என்கின்ற அற்புதமான கருத்தமைவை பாரதி வெளிக்கொண்டு வருகின்றான். இங்கு உயிர்களை நேசிக்கும் பாரதியின் கவியுள்ளம் அதனை மனித வாழ்வுக்கு முன்னுதாரணமாக்கும் அற்புதத்தைக் காணலாம்.

*கடைசிச் சரணத்தில் முற்றத்திலேயுங்*
*கழனி வெளியிலும் முன்கண்ட தானியம்*
*தன்னைக் கொணர்ந்துண்டு மற்றப் பொழுது*
*கதைசொல்லித் தூங்கிப்பின் வைகறையாகு*
*முன் பாடி விழிப்புற்று*

சிட்டுக்குருவியின் கவலையற்ற களிப்பு வாழ்வினை மனிதவாழ்வின் கவலையற்ற மகிழ்ச்சி வாழ்வுக்கான முன்னுதாரணமாப் பாரதி தன் இயற்கையையும் உயிர்களையும் நேசிக்கும் உள்ளத்தின் பின்னணியில் நம் விடுதலை என்பது எம் நம் வாழ்வினை நாம் மகிழச்சியாக வைத்திருப்பதில் தான் தங்கியுள்ளது என்று கவிதாப்பிரகடனம் செய்கின்றான். பாரதியின் விடுதலை வேட்கை என்பது அவனது இயற்கையாக அமைவுற்று அவன் நேசித்த இந்தியாவின் விடுதலையையும் தான் உயிர்களாக நேசித்த மக்களின் விடுதலை வாழ்வையும் அடித்தளமாகக் கொண்டு எழுந்தவொன்று.

இதனால் இந்த விடுதலை உணர்வுக்கான தன் நாடென்னும் இயற்கையையும் தன்னோடு வாழும் உயிர்களையும் குழந்தைப் பிராயம் முதலே குழந்தை தனதாகப் பழக்கப்படுத்தி வாழ்வை விடுதலை வாழ்வாக வழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது பாரதியின் கவியுள்ளக் கனவு. இந்த மைய நோக்கிலேயே "ஓடி விளையாடு பாப்பா" என்ற பாடலை குழந்தை வாழும் வீட்டுச் சூழலில் அதனுடன் சூழவுள்ள பறவைகள் மிருகங்களை அதன் தோழராக்கி அற்புதமான முறையில் சமுக நீதியையும் சமத்துவ உணர்வையும் ஒருமைப்பாட்டு வாழ்வையும் பாரதி குழந்தையின் அறிவாகவே அது கொண்டெழப் பழக்குகின்றான். இந்தப் பாப்பா பாட்டிலும் தெய்வம் நமக்குத் துணை பாப்பா என்ற கருத்தை ஆழப்படுத்தி தெய்வம் என்று தமிழ் கூறும் ஒருவருக்கு ஆபத்து வேளையில் அல்லது அவசர நேரத்தில் தோன்றாத்துணையாகத் தெய்வமாக மாறும் பழக்கத்தைக் குழந்தைகள் வழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று தெளிவாக குழந்தையின் மனதிருத்துகின்றான்.

இன்னும் தமிழ் எழுத்துலகில் முதன் முதலில் தன்னாட்சி உரிமை மக்களின் நாளாந்த வாழ்வுக்கான ஆட்சி முறைமையாக வேண்டும் என்று எழுதியவன் - பேசியவன் பாரதி. சுயராஜ்யம் என்பது தேசத்தின் ஆட்சி முறைமையாவதற்கு அறிவுச் சுயராஜ்யம் வளர்க்கப்பட வேண்டும். அறிவின் தெளிவே ஞானம். அரசியல் ஞானம் மக்களின் அறிவின் தெளிவு மூலமாக வளரவேண்டும் என்று பலமாக எழுதியவன் பாரதி. மேலும் ஆண்களுக்கு மட்டுமல்ல பெண்களுக்கும் சுயராஜ்யம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தியவன் பாரதி. எனவே தன்னாட்சியை

தொடர்ச்சி 13ஆம் பக்கம்



# போரினால் முதன்மைப் பாதிப்புக்கு உள்ளாகுபவர்கள் சிறுவர்களே

தமிழில்: ஜெயந்திரன்

## பகுதி 1

போரின் கொடூரங்கள் யாரையுமே விட்டுவைப்பதில்லை. கடைசியில், எந்தவொரு பாவமுமறியாத சிறுபிள்ளைகளே போரின் சுமையைச் சுமக்கவேண்டியிருக்கிறது.

எந்தவொரு போரை எடுத்துக்கொண்டாலும், அதனால் மிகவும் அதிகமாகப் பாதிக்கப்படுகின்றவர்களாகவும், அந்தப் போரின் தாக்கங்களுக்கு முகம் கொடுப்பவர்களாகவும் சிறுவர்கள் இருப்பதை நாம் காணக்கூடியதாகவிருக்கிறது. ஏற்கனவே நடந்துமுடிந்த போர்கள் அனைத்துமே, சிறுவர்களின் வாழ்வில் மிகவும் மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தியிருக்கும் அதே நேரத்தில், சமகாலத்தில் தற்போது நடை பெற்றுக் கொண்டிருக்கும் போர்களும் தொடர்ந்து, அவர்கள் மேல் துன்பங்களையும் துயரங்களையும் சுமத்திக்கொண்டிருக்கின்றன. போர்கள் நடைபெறும் போது, அவ்வேளையில் சிறுவர்களைப் பாதுகாக்கஐக்கியநாடுகள்பலமுயற்சிகளைஎடுத்து வருகிறது. ஆனால் பல நாடுகள் தமது வீட்டோ அதிகாரத்தைத் தவறான முறையில் பயன்படுத்தி வருவதன் காரணமாகவும், புவிசார் அரசியலின் காரணமாகவும், அந்த அமைப்பின் செயற்திறன் மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருக்கிறது. உலகின் பல பாகங்களிலும் நடைபெறும் போர்களின் காரணமாக உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் சொல்லொணாத் துன்பதுயரங்களை சிறுவர்கள் சந்தித்து வருகிறார்கள்.

### போர்களும் அவற்றால் பாதிப்புக்கு உள்ளாகும் சிறுவர்களும்

கடந்த நூற்றாண்டில் நடைபெற்று முடிந்த போர்களும் மோதல்களும், அப்பாவிப் பொதுமக்களின் உயிரிழப்புக்கும் இன்னும் குறிப்பாக சிறுவர்களின் உயிரிழப்புகளுக்கும் காரணமாக அமைந்திருக்கின்றன. முதலாம் உலகப் போரில் (1914-1918) நேரடியாக நடைபெற்ற மோதல்கள், குண்டுவீச்சுத் தாக்குதல்கள், பட்டினி போன்றவற்றின் காரணமாக 1.6 மில்லியன் சிறுவர்கள் கொல்லப்பட்டார்கள். அதே நேரம் இரண்டாம் உலகப் போரோ (1939-1945) இன்னும் அதிகமான இழப்புகளை, அதாவது 6 மில்லியன் சிறுவர்களின் உயிரிழப்புக்குக் காரணமாக அமைந்ததாக ஆய்வுகள் கூறுகின்றன.



உலகப் போர்களுக்கு அப்பால், கொரியப் போர் (1950-1953), வியட்நாம் போர் (1955-1975), றுவாண்டா இனவழிப்பு நிகழ்வு (ஏப்பிரல்- யூலை 1994) போன்ற போர்களும் கடந்த நூற்றாண்டில் நடைபெற்று முடிந்திருக்கின்றன. இந்தப் போர்கள் அனைத்துமே மிகவும் மோசமான பாதிப்புகளை சிறுவர்களில் தோற்றுவித்திருக்கின்றன. எடுத்துக்காட்டாக கொரியப் போரை எடுத்துக்கொண்டால், அது 5 இலட்சம் சிறுவர்களின் உயிரிழப்புக்குக் காரணமாக அமைந்ததாகக் கணிப்பிடப்படுகிறது. வியட்நாம் போரோ அதற்கு எந்தவிதத்திலும் வேறுபடவில்லை. இரண்டு மில்லியன் சிறுவர்கள் அந்தப் போரினால் பாதிப்புகளுக்கு உள்ளானார்கள். றுவாண்டாவில் நிகழ்த்தப்பட்ட இனப் படுகொலையின் போது, சிறுவர்கள் விசேடமாக இலக்குவைக்கப்பட்டார்கள். 100 நாட்களில், அண்ணளவாக 5 இலட்சம் சிறுவர்கள் கொல்லப்பட்டிருந்தார்கள்.

ஆப்கானிஸ்தான், மத்திய ஆபிரிக்கக் குடியரசு, எத்தியோப்பியா, லிபியா, மாலி, சோமாலியா, தென் சூடான், மற்றும் சிரியா போன்ற நாடுகளிலே தற்போது உள்நாட்டுப் போர்கள் நடந்துகொண்டிருக்கின்றன. இந்தப் போர்கள் கணிசமான அளவு உயிரிழப்புகளையும் இடப்பெயர்வுகளையும் பொதுமக்கள் நடுவில் ஏற்படுத்தியிருக்கின்றன. துரதிட்டவசமாக போர்கள் நடைபெறும் போது, சிறுவர்களுக்கே பாதிப்புகள்அதிகமாகஏற்படுவது மட்டுமன்றி, உள்நாட்டுப் போர்களிலும் எல்லோரையும் விட சிறுவர்களே அதிக பாதிப்புகளுக்கு உள்ளாகிறார்கள்.

### இஸ்ரேல் - பாலஸ்தீனப் போர்

இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனத்துக்குமிடையே தற்போது நடைபெற்றுவருகின்ற போர், அந்தப் பிரதேசத்தில் வாழுகின்ற சிறுவர்கள் மத்தியில் மிகவும் கடுமையான உடனடிப் பாதிப்புகளை ஏற்படுத்தியிருப்பது மட்டுமன்றி, அந்தச் சிறுவர்கள் இந்த அனுபவங்களின் தாக்கங்களை தமது வாழ்வு பூராகவும் சுமக்க வேண்டிய சூழல் இருப்பதும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. "சிறுவர்களின் புதைகுழியாக காஸா நாளுக்கு நாள் மாறிக்கொண்டிருக்கிறது" என்று ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் குஸ்தாவே குட்டெரெஸ் (Gustavo Guterres) அண்மையில் எச்சரிக்கை செய்திருக்கிறார். காஸாப் பிரதேசத்தில், இஸ்ரேல் தாக்குதலைத் தொடர்ந்த காலத்திலிருந்து இன்றுவரை, 15,200 பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இந்த எண்ணிக்கையில் 6000 சிறுவர்களும் உள்ளடங்குகிறார்கள். (தற்போதைய எண்ணிக்கை இதைவிட அதிகமாகவே இருக்கும்). நடைபெற்றுவரும் இந்தப் போரின் காரணமாக இருபக்கத்திலுமுள்ள சிறுவர்கள், உடல், உள ரீதியிலான நெருக்கீடுகளுக்கும் கல்வியில் பாதிப்புகளுக்கும், உள்ளாகியிருப்பதுடன், சுகாதாரம், குடிநீர் போன்ற அடிப்படைத் தேவைகளையும் நிறைவுசெய்ய முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஒரு சக்கரமாக மீண்டும் மீண்டும் தொடருகின்ற இந்த வன்முறைகள், இந்தப் போரின் காரணமாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் உறுதியற்ற நிலை போன்ற காரணிகள், ஓர் அமைதி நிறைந்த மற்றும் பாதுகாப்பு நிறைந்த சிறுபராயத்தை இந்தச் சிறுவர்களிடமிருந்து பறித்தெடுத்திருக்கும் அதே நேரம், அவர்களது வாழ்க்கையில் நிலையான பாதிப்புகளையும் தோற்றுவித்திருக்கின்றன.



ஐக்கிய நாடுகளின் தரவுகளின் படி, கடந்த இருபது ஆண்டுகளில் நடைபெற்ற போர்களின் காரணமாக ஆயிரக்கணக்கான சிறுவர்கள் கொல்லப்பட்டும் காயங்களுக்கு உள்ளாகியும் இருக்கிறார்கள். குண்டுத் தாக்குதல்கள், துப்பாக்கிச் சூடுகள், வான் தாக்குதல்கள் போன்றவை நேரலாம் என்ற தொடர்ச்சியான பயத்தோடும் அங்கலாய்ப்போடும் இந்தச் சிறுவர்கள் ஒவ்வொரு கணமும் வாழ்ந்துகொண்டிருப்பதன் காரணத்தினால், அவர்கள் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டிருப்பதுடன், நீண்ட கால உளவியல் உபாதைகளைச் சந்திப்பதுடன், அன்றாட வாழ்க்கையைக் கொண்டுநடத்துவதில் பல சிரமங்களை அனுபவிக்கிறார்கள். போரின் காரணமாக தமது குடும்ப உறவுகளையும் நண்பர்களையும் இவர்கள் தொடர்ந்து இழந்து வருவதன் காரணமாக, அவர்களது உணர்வு ரீதியான தாக்கங்கள் மேலும் அதிகரிப்பது மட்டுமன்றி, உளச்சோர்வு, பதற்றம், உளநெருக்கீட்டுக்குப் பின்னரான உளக்கோளாறு போன்றவற்றுக்கும் இந்தச் சிறுவர்களை உள்ளாக நேரிடுகின்றது.

### உள்நாட்டுப் போர்களுக்கு முகம்கொடுக்கும் சிறுவர்கள் சந்திக்கும் பாதிப்புகள்

உள்நாட்டுப் போர்களினால் சிறுவர்களுக்கு

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

# 2024 ஆம் ஆண்டு உலகில் ஏற்படப்போகும் பொருளாதார மாற்றங்கள்

தமிழில்: ஆர்த்திகன்

அடுத்த வருடம் என்ன நடைபெறும் என்பதை டென்மார்க்கைத் தளமாகக் கொண்ட சக்சோ வங்கி எதிர்வு கூறியுள்ளது. வங்கியின் எதிர்வுகூறல் உலகின் அரசியல், தொழில்நுட்ப மற்றும் பொருளாதார மையங்களை ஆட்டங்காண வைத்துள்ளதுடன் அவை சாத்தியமாகவும் தென்படுகின்றது.

எதிர்வரும் வருடம் அமெரிக்காவின் செலவினங்கள் மேலும் அதிகரிக்கும். தனது பொருளாதாரத்தைதக்கவைப்பதற்காகஅமெரிக்கா அதிக நிதியை கடனாக பெறும். நாட்டில் சமூகங்களுக்கிடையில் கிளர்ச்சி எற்படுவதை தடுப்பதற்கு அமெரிக்காவுக்கு இது தேவையாக இருக்கும். பணவீக்கம் காரணமாக அமெரிக்காவின் திறைசேரி கடும் நெருக்கடிகளை சந்திக்கும். பல நாடுகள் அமெரிக்காவில் உள்ள தமது பணத்தை வெளியே கொண்டுசெல்ல முயற்சிப்பார்கள். வருமானத்திற்காக அரச பிணைமுறிகளை அமெரிக்கா வரியில்லாமல் விற்பனை செய்யும் நிலை ஏற்படும்.




அமெரிக்காவில்அடுத்த வருடம்நவம்பரில் இடம்பெறும் தேர்தலில் மூன்றாவது கட்சியின் வேட்பாளரான றொபேட் எப். கெனெடி ஜுனியர் வெற்றியீட்டுவார். அதன் மூலம் அமெரிக்காவில் புதிய அரசியல் சரித்திரம் ஆரம்பமாகும். இது உலகில் போர்களைத் தவிர்க்கவும், அமைதி மற்றும் பாரபட்சமற்றமுறைகள் ஏற்படவும் உதவும்.

உலக மக்களின் ஆரோக்கியமற்ற வாழ்வு அதிகரிக்கும், எடை குறைக்கும் மருந்துகளை அதிக மக்கள் உள்ளெடுப்பதுடன், உடற்பயிற்சி செய்வதை மக்கள் நிறுத்துவதும் அதிகரிக்கும். ஆரோக்கிமற்ற உணவுப் பாவனை அதிகரிக்கும். இதனால்கடைகளில்தயாரிக்கப்படும்உணவுகளின் விற்பனை அதிகரிக்கும். மக்டோனால்ட் மற்றும் கொக்கோ கோலா போன்றவற்றின் பங்கு சந்தை விலைகள் 60 விகிதம் அதிகரிக்கும்.

ஐரோப்பிய ஒன்றியம் செல்வந்தர்களுக்கான வரி அறவீட்டை 2 விகிதம் அதிகரிப்பதன் மூலம் ஐரோப்பிய நாடுகள் தமது செலவினங்களை சமாளிக்க முற்படும். அது ஐரோப்பிய ஒன்றிய மக்களின் ஆடம்பரவாழ்வை பாதிக்கும். இதனால் எல்.வி.எம்.எச் மற்றும் போர்ஸ் போன்றவற்றின் பங்குகள் 40 விகிதம் வீழ்ச்சி காணும்.



நாடுகளின் தேசிய பாதுகாப்புக்கு செயற்கை நுண்ணறிவு மிகவும் அச்சுறுத்தலாக மாறும். உயர் அதிகாரத்தில் உள்ளவர்களை போலியாக காண்பிக்கும் நிகழ்வுகள் அதிகரிக்கும். போலியான தகவல்கள் அதிகம் பரப்பப்படும் மற்றும் போலியான உயர் அதிகாரிகள் போன்ற தோற்றப்பாடுகள்அதிகளவு உருவாக்கப்படுவதால் பல நாடுகள் செயற்கை நுண்ணறிவை தடை செய்யும் சட்டங்களை கொண்டுவரும். எனவே சிறிய குழுவே செய்திகளை பரப்புவதற்கு அனுமதிக்கப்படும்.

உலகம் பொருளாதார வீழ்ச்சியை சந்திக்கும். பணவீக்கம் அதிகரிப்பதால் வட்டிவிகிதத்தை நாடுகள் குறைக்கமுடியாத நெருக்கடிகளை சந்திக் கும். நாடுகள் மிகப்பெரும் கடன்சுமைக்குள் விழும். வரவு செலவுத்திட்டத்தில் மிகப்பெரும் பற்றாக் குறை ஏற்படும். அது றோம் கிளப்பை உருவாக்கும். அது உலகின் வர்த்தக நடைமுறைகளில் உள்ள சிக்கல்களை கையாளும்.

அமெரிக்கா, பிரித்தானியா, பிரேசில், இந்தியா, கனடா, மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் கூட்டாக சீனா, ஜேர்மனி, நோர்வே, யப்பான், சிங்கப்பூர் மற்றும் நெதர்லாந்துடன் பொருளாதார பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும்.



தங்கம், வெள்ளி மற்றும் கிறிப்போகரன்சி ஆகியவற்றின் மதிப்புக்கள் உயரும். அவையே நாடுகளின் கையிருப்பாக மாற்றமடையும்.

யப்பானின் பொருளாதாரம் எதிர்பார்க்காத அளவுக்கு வளர்ச்சியடையும், அடுத்தவருடம் அது 7 விகிதமாக வளரலாம். யப்பான் வங்கியின் கொள்கையில் மாற்றம் ஏற்படும். யப்பான் மக்களின் ஊதியமும் 4 விகிதம் அதிகரிக்கும்.

எண்ணெய் விலை பரலுக்கு 150 டொலர்களாக அதிகரிக்கும். அதாவது தற்போதைய விலையைவிட இரண்டு மடங்கு அதிகரிக்கும். உலகில் உள்ள கால்பந்தாட்ட அணிகள் பல வற்றை எண்ணெய் வளம் கொண்ட நாடுகள் வாங்கிக் கொளும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

• • •

## படிம எரிபொரு... தொடர்ச்சி ...

ஏற்படுகின்ற பாதிப்புகளை உற்றுநோக்கினால், அவர்கள் சந்திக்கின்ற உயிரிழப்புகளும் காயங்களுமே மிக மோசமானவையாகப் பார்க்கப்படுகின்றன. போர்கள் நடைபெறும் பிரதேசங்களில், வன்முறைகள், குண்டுத்தாக்குதல்கள், ஆயுத மோதல்கள் போன்றவை மிகவும் அதிகமாக நிகழ்வதன் காரணமாக, அங்குள்ள சிறுவர்களின் உயிருக்கு அதிக ஆபத்தை ஏற்படுத்துகின்றன. பல தடவைகளில், நேரடியாக மேற்கொள்ளப்படும் தாக்குதல்களில் அவர்கள் இலக்கு வைக்கப்படுகிறார்கள் அல்லது நடைபெறும் சண்டையில் அகப்பட்டுக்கொள்கிறார்கள். இதன் காரணமாக அவர்கள் ஒன்றில் உயிரிழக்கிறார்கள் அல்லது காயங்களுக்கு உள்ளாகிறார்கள். வன்முறைகளை நேரடியாக அனுபவிப்பதன் காரணமாக அல்லது அவற்றைக் கண்ணால் பார்ப்பதன் காரணமாகவும் இடப்பெயர்வுகள், குடும்பங்களை விட்டுப் பிரிதல், குடும்ப உறவுகளின் இழப்புகள் போன்றவற்றின் காரணமாக உளரீதியான நெருக்கடிகளுக்கும் பாதிப்புகளுக்கும் உள்ளாகி றார்கள். சுகாதார வசதிகள், கல்வி, ஊட்டச்சத்து போன்றவை இல்லாமற் போவதன் காரணத்தினால், அவர்கள் ஊட்டச்சத்துக்குறைவு, நோய்கள், கல்வி இழப்பு போன்றவற்றுக்கும் ஆளாகுகிறார்கள். இவ்வாறான காரணங்களினால் அவர்களது உடல், உள விருத்தி பாதிப்புக்கு உள்ளாவதுடன் தவிர்க்கப்படக்கூடிய நோய்களுக்கு அவர்கள் உள்ளாகுவதுடன், குழந்தை மற்றும் சிறுவர்களின் இறப்பு அதிகரிப்பையும் தோற்றுவிக்கிறது.

போரின் இன்னொரு முக்கிய பாதிப்பு என்னவென்றால், அது பலரை மாற்றுத்திறனாளிகளாக ஆக்குகின்றது. சிறுவர்களை இது பல வழிகளில் பாதிக்கலாம். விமானத் தாக்குதல்கள், குண்டுவெடிப்புகள், துப்பாக்கிச்சூடு, குண்டுத் தாக்குதல்கள் என்பவற்றைச் சிறுவர்கள் சந்திக்கும் போது, அவர்கள் தமது அவயவங்களை இழக்கக்கூடிய நிலைக்கு உள்ளாவது மட்டுமன்றி, எரிகாயங்கள், மற்றும் முள்ளந்தண்டு தொடர்பான காயங்களுக்கும் உள்ளாகுகின்றார்கள். மேலதிகமாக, துப்பாக்கிச் சூடுகளின் நடுவில் அகப்படும் போதோ, அல்லது அவர்கள் இலக்கு வைத்துத் தாக்கப்படும் போதோ, நிரந்தரமான உடலியல் பாதிப்புகளுக்கு உட்படுத்தப்படுவது மட்டுமன்றி, உயிரிழப்புகளுக்கு உள்ளாகும் ஆபத்தும் இருக்கிறது. அதுமட்டுமன்றி, போரில் சிறுவர்கள் சந்திக்கும் உளநெருக்கடிகள் அவர்களது ஆற்றல்களில் பாதிப்புகளை ஏற்படுத்துவது மட்டுமன்றி, அவர்கள் அனுபவிக்கின்ற மன அழுத்தம் மற்றும் பயம் போன்ற உணர்வுகளின் காரணமாக அவர்களது உளநலம் நீண்டகாலப் பாதிப்புகளையும் சந்திக்கலாம்.

பல சந்தர்ப்பங்களில் உள்நாட்டுப் போர்கள், மக்கள் சமூகங்கள் நடுவே பாரிய இடப்பெயர்வுகளைத் தோற்றுவிக்கலாம். இதனால் குடும்பங்கள் தமது சொந்த வீடுகளைக் கைவிட்டு, சனத்தொகை அதிகமான இடப்பெயர்வு முகாம்களிலோ அல்லது அயல்நாடுகளிலோ தஞ்சம் அடையலாம். அவ்வாறான சூழல்களில் வாழ்க்கை வசதிகள் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதுடன், அடிப்படைத் தேவைகளைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வாய்ப்புகளும் அங்கு குறைவாகவே காணப்படுகின்றன. இடப்பெயர்வு முகாம்களில் வாழ்கின்ற சிறுவர்கள், சுரண்டல்கள், துஷ்பிரயோகங்கள், கடத்தல்கள் போன்றவற்றுக்கு உள்ளாகும் ஆபத்துகள் இருக்கின்றன. உறுதித்தன்மை, பழக்கப்படுத்தப்பட்ட சூழல், ஆதரவு வலைப்பின்னல்கள் போன்றவை இழக்கப்படும் போது, அவை சிறுவர்களின் உணர்வுநலனைப் பாதிப்புக்கு உள்ளாக்கி, மன அழுத்தம், பதற்றம், உளநெருக்கீடு போன்றவை அவர்களில் மேலும் அதிகரிக்கக் காரணமாகி விடுகின்றன.

நன்றி: groundviews.org

தொடரும்

## சிறந்த பெண் ... தொடர்ச்சி ...

செல்ல பல வழிகள் தனக்கு இருக்கு என்பதை உணர்ந்து கொண்டாள். மகளிர் சங்கத்தின் ஒரு தலைவியாக செயற்பட்டு சங்கத்தின் வளர்ச்சிக்காகவும் பாடுபடுவதுடன் பல வகையான வேலைத் திட்டங்களையும் சங்கம் மூலம் நடைமுறைப்படுத்தி ஆளுமையினை விருத்தி செய்துள்ளார். ஒரு சிறந்தொரு தலைமைத்துவம் தனது வியாபாரம் தொழில் சந்தைப்படுத்தல் மூலமாக அதனை நிரூபித்து காட்டியுள்ளார்.

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டாலும் பொருட்கொள் வனவில் தட்டுப்பாடு ஏற்பட்ட வேலையிலும் தோல்வியை கண்டு துவண்டு போகாது சவால்களுக்கும் முகங்கொடுத்து வெற்றி கண்டுள்ளார். திருகோணமலை மாவட்டத்தின் பல இடங்களுக்கு சென்று தனது தொழில் விருத்திக்காக பாடுபட்டு வரும் இது போன்ற பெண்களை நாமும் கௌரவிக்க வேண்டும்.

வாழ்க்கையில் ஒரு சாதனை புரிய வேண்டும் என்ற எண்ணம் எப்போதும் அவரது தொழில் முயற்சியில் ஓடிக்கொண்டே இருந்தன.

இதன் மூலம் உழைக்கும் பணம் குடும்பம் கல்வி செலவு என பலதரப்பட்ட விடயங்களுக்காகவும் அன்றாட ஜீவனாம்சத்துக்காகவும் பாரிய பங்களிப்பு செய்வதை உணர முடிகிறது.

அடிக்கடி அவ்வப்போது சுற்றுலா பயணங்கள் சமூக நல்லிணக்க பயணங்கள் என ஏனைய சமூக அமைப்புக்கள் மூலமாகவும் இவர் செயற்பட்டு வருவதையும் அறிய முடிகிறது.

தமிழ் மொழி தனது தாய் மொழியாக இருந்தாலும் சரளமாக சிங்கள மொழி பேச முடியும் என்பதனால் மொழி ஒரு பிரச்சினை அல்ல தனது தொழிலுக்கு மேலும் ஒரு அடி உயரத்தில் வைக்கிறது.

சமூகத்தில் நிம்மதியாக தலை நிமிர்ந்து வாழ்வதற்கான சமூக ஒத்திசைவுடன் அக்கம் பக்கத்தாருடன் சகோதரத்துவ பண்புகளை கொண்டு வாழும் நல்லதொரு மனப்பாங்கினை கொண்டவராக திகழ்கிறார் இப்பெண்மணி.

ஒட்டுமொத்தமாக வாழ்வின் பல இரகசியங்களை கொண்டிருந்தால் பணம் என்கின்ற தேவை இங்கு உணரப்படுகிறது. இப்படியான தொழில்களால் அவளின் முன்னேற்றம் கண்டு சிலர் வியந்து போயுள்ளனர்.

வரலாற்றில் பல தடைகளை தாண்டி சாதனை தொழிலாக இந்த தொழில் மூலம் அவர் நல்லதொரு பொருளாதாரத்தை கட்டியெழுப்பியுள்ளார்.

பல்வேறு சமூக மட்ட அமைப்புக்களுடன் திருகோணமலை மாவட்டத்தில் மட்டுமல்ல கிழக்கில் உள்ள அமைப்புக்களுடன் தொடர்பு பட்டதாக அவரது கடந்த கால நினைவுகளை வெளிப்படுத்தியிருந்தார்.

தனது கடையில் பல இளம் பெண் யுவதிகள் முன்னர் பயிற்சி பெற்றுச் சென்று சில இடங்களில் பணி புரிவதாகவும் அவர்களுக்கான பயிற்சியினை தானே கொடுத்ததாகவும் இங்கு சுட்டிக்காட்டினார். இது போன்ற பல பெண்களை உருவாக்க வேண்டும் நாட்டின் அந்நியச் செலவாணி இவர்கள் மூலமாக கிடைக்க வேண்டும் என்பதும் ஒரு எதிர்பார்ப்பாக காணப்படுகிறது.

உற்பத்தி பொருட்களை கொள்வனவு செய்வதற்காக கொழும்புக்கு செல்வது வழக்கம் ஆனாலும் தூர பஸ் பயணம் தனக்கு சரிவராது ஒரு வகையான வெறுப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்த அவள் தொழிலை விட்டு விடாது மேலும் பல வளர்ச்சிகளை நம்மில் இருந்து உருவாக்கி எதிர்கால சந்ததியினர் அனுபவிக்க வேண்டும் எனவும் கூறியிருந்தார்.

"பெண்களாக இருந்தாலும் தொழிலின்றி வீடுகளில் முடங்கி விடக்கூடாது பல வழிகளில் தொழிலை செய்து கொள்ள முடியும் தற்போது ஒருவர் மாத்திரம் உழைப்பது போதாது பெண்களே இளம் யுவதிகளே நீங்களும் தொழிலை கற்று இது போன்று ஏதாவது ஒன்றை வாழ்க்கையில் வருமானமீட்டும் பெண்ணாக இருங்கள் சுமையாக இருந்து விடக் கூடாது" என்ற விடயங்களை நாட்டில் உள்ள பெண்களுக்கு அவர் அடிக்கோடிட்டு காட்டியுள்ளார்.

• • •

## போரை எதிர் ... தொடர்ச்சி ...

பயன்படுத்தாலாம் ஆனால் அவற்றின் தூரவீச்சு குறைவானவை.

எனது கருத்தின்படி டிஸ்ரோயர் கப்பல் ஏஸ்.எம்-2 வகை ஏவுகணைகளை தான் பயன்படுத்துகின்றனர். விமானங்களை அதிக தொலைவில் வைத்து சுடவே அவர்கள் விரும்புகின்றனர். அருகில் வைத்து சுடுவது ஆபத்தானது என சி.ஐ.ஏ அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். தற்கொலை தாக்குதல் விமானங்களின் விலை என்பது 2000 டொலர்கள் தான்.

ஆனால் அமெரிக்காவிடம் தற்போது பயன்படுத்தும் ஏவுகணைகளை விட மலிவான தெரிவுகள் இல்லை. அதனை அவர்கள் எட்ட வேணுமெனில் நீண்ட நாட்கள் எடுக்கும் என கடற்படையின் மத்திய ஆய்வு மையத்தின் அதிகாரி சாமுவேல் பென்டெற் தெரிவித்துள்ளார்.

ஹதீஸின் தாக்குதல்களை தடுக்க பல நாடுகளை இணைத்து கடற்படை கூட்டணி ஒன்றை உருவாக்கப்போவதான கடந்த திங்கட்கிழமை அமெரிக்காவின் பாதுகாப்புச் செயலாளர் லொயிட் ஒஸ்ரின் தெரிவித்தள்ளார். ஆனால் அமெரிக்காவின் அந்த திட்டம் மோல்களை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்லும் எனவும், காசாவில் போர் நிறுத்தப்படும் வரையில் தாம் ஓயப்போவதில்லை எனவும் ஹதீஸ் படையினரின் பேச்சாளர் மொகமீட் அல் பக்காறி தெரிவித்துள்ளார்.

நாம் என்ன விலை கொடுக்கவும் தயாராக இருக்கின்றோம் எம்மிடம் இன்னும் வெளியில் எடுக்காத பல நவீன ஆயுதங்கள் இருக்கின்றன. கடந்த 9 வருடங்களாக இந்த கூட்டணியினர் எம்மை அழிக்க முயன்றனர் அது முடியவில்லை என அவர் மேலும் தெரிவித்தள்ளார்.

## அழுத்தங்கள் ... தொடர்ச்சி ...

அதேநேரம் தமிழர்களின் போராட்டங்களின்போது புலம்பெயர் அமைப்புகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தி தாங்கள் தமிழ் தேசியவாதிகள் காட்டிக்கொண்டு அவர்களிடம் பணங்களைப் பெற்று ஆர்ப்பாட்டங்களிலும் போராட்டங்களிலும் நின்றுகொண்டு ஊடகங்களுக்கு தலையைக் காட்டுவதை மட்டுமே செய்துவருகின்றனர்.

இவ்வாறானவர்கள் தமிழ் தேசியத்திற்கு மிகவும் ஆபத்தானவர்கள் என்பதை அனைவரும் உணர்ந்துகொள்ளவேண்டும்.

அதன்காரணமாகவே இன்று கிழக்கில் தமிழ் தேசியம் சார்ந்து மக்களை ஒருங்கிணைத்துசெயற்படக்கூடிய தமிழ் தேசியவாதிகளை ஒன்றிணைத்து சிவில் சமூக கட்டமைப்பினை உருவாக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.இந்த பணிகளை கட்டமைப்பு செய்து அதன் மூலம் கிழக்கின் மூன்று மாவட்டங்களிலும் வலுவான கட்டமைப்பு உருவாக்கப்படவேண்டிய அவசியம் உணரப்பட்டுள்ளது.

அதற்கான படிகள் தற்போது முன்னெடுக்கப்படும் நிலையில் இவற்றினை வடகிழக்கு சார்ந்த கட்டமைப்பாக உருவாக்கவேண்டிய தேவையிருக்கின்றது.

அவ்வாறான கட்டமைப்புகள் உருவாக்கப்படுமானால் இன்று பண்ணையாளர்கள் நூறு நாள் கடந்தும் தாங்கள் மட்டும் போராடும் சூழ்நிலைகள் இல்லாமல்போய் ஒன்றுபட்ட போராட்டமாக வடகிழக்கு சார்ந்த போராட்டமாக முன்னெடுக்கும் சூழ்நிலைகள் ஏற்படும். அவ்வாறான சூழ்நிலைகள் ஏற்படும்போதே சர்வதேச சமூகமும் இலங்கைக்கு அழுத்தங்களை வழங்கக்கூடிய சூழ்நிலை ஏற்படும். இல்லாது போனால் ஆயிரம் நாட்கள் போராட்டம் நடாத்தினாலும் எந்த போராட்டத்தையும் யாரும் கணக்கில் எடுக்காத நிலைமையே ஏற்படும்

## தேர்தல் அச்சம் ... தொடர்ச்சி ...

குலசிங்கம் திலீபன் ஆகியோர் தமிழர் தரப்பில் கலந்து கொண்டனர்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களின் காணி உரிமை, மீழ்குடியேற்றம் மற்றும் இனநல்லிணக்கப்பாடு தொடர்பான சட்ட அமூலாக்கம், தமிழகத்தில் இலங்கை அகதிகள் எதிர்கொள்ளும் சாவால்கள் குறித்து அங்கு கலந்துரையாடப்பட்டது.

அரசின் தரப்பில் நீதி அமைச்சர், காணி அமைச்சர், வனத்துறை அமைச்சகத்தின் செயலாளர், பாதுகாப்பு அமைச்சகத்தின் செயலாளர் ஆகியோர் உட்பட மேலும் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

## இஸ்ரேலின் ... தொடர்ச்சி ...

நிராகரித்துள்ளதுடன், பேச்சுக்கள் ஆரம்பிப்பதற்கு முன்னர் போர் நிறுத்தப்பட வேண்டும் எனவும்இ தங்களிடம் உள்ள 100 இஸ்ரேலிய கைதிகளை விடுவிப்பதற்கு பதி லாக இஸ்ரேல் தன்வசம் உள்ள எல்லா கைதிகளையும் விடுதலை செய்ய வேண்டும் எனவும் அவை தெரிவித்துள்ளன.

கடந்த மாதம் இடம்பெற்ற போர் நிறுத்தத்தின்போது ஹமாஸ் 105 கைதிகளையும், இஸ்ரேல் 240 கைதிகளையும் விடுவித்திருந்தன.

## செக் குடியரசில் ... தொடர்ச்சி ...

அவர் இதனை மேற்கொண்டிருக்கலாம் என காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். கடந்த 30 வருடங்களில்அங்குஇடம்பெற்ற மிகமோசமான சம்பவம் இதுவாகும். இந்த சம்பவத்தை கேட்டு தான் அதிர்ச்சியடைந்ததாகவும், இறந்த மாணவர்களின் குடும்பங்களுக்கு தனது அனுதாபங்களை தெரிவிப்பதாகவும் செக் குடியரசின் அரச தலைவர் பெற்ர பாவல் தெரிவித்துள்ளார்.

## பேச்சுக்கு அழை ... தொடர்ச்சி ...

தெரியும். ஆனால், வாக்குறுதிகளை வழங்க முடியும்.

இந்த நிலையில்தான், வடக்கு, கிழக்கு பாராளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பு ஒன்றுக்கு ரணில் அழைப்பு விடுத்திருந்தார். வியாழக்கிழமை இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் காணிப்பிரச்சினை, கைதிகள் விவகாரம் என்பவற்றுடன் அரசியல் தீர்வு தொடர்பாகவும் பேசப்பட்டது. அரசியல் தீர்வைப் பொறுத்தவரையில், அதற்கான முயற்சிகள் எதுவும் இடம்பெறாது என ரணில் தெளிவாகவே சொல்லிவிட்டார். பொதுத் தேர்தலின் பின்னர் ஒரு வருடத்துக்குள் புதிய அரசியலமைப்பின் மூலமாக தீர்வு முன்வைக்கப்படும் என்பதுதான் அவரது நிலைப்பாடு.

அரசியலமைப்பின்படி 2025 ஆகஸ்ட்டில் தான் பொதுத் தேர்தல் நடைபெற வேண்டும். அப்படியானால், 2026 இல்தான் தீர்வு குறித்து ஆராயப்படும். அதற்கு முன்னர் அடுத்த வருடம் நடைபெறப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் அவர் வெற்றிபெற வேண்டும். ஜனாதிபதித் தேர்தலில் என்னை வெல்ல வையுங்கள் 2026 இல் தீர்வு குறித்து புதிய பாராளுமன்றத்தில் ஆராய்வோம் என்பதைச் சொல்வதற்காகத்தான் தமிழ் எம்.பி.க்களை ரணில் பேச்சுவார்த்தை மேசைக்கு அழைத்திருந்தாரா?

## எதற்காக ... தொடர்ச்சி ...

முழுமையாக அதிகாரம் பெற்றவர்களாக அவர்கள் இல்லை. நீர், சுகாதாரம், கல்வி முதலானவற்றில் பாரபட்சமான முறையில் அரசாங்கத்தினால் நடத்தப்படும் நிலையில் உள்ளார்கள்.

இவ்விடயங்களில் எவ்வாறு பிரதான செல்நெறியுடன் இணைந்து கொள்வது, அரசாங்கத்தின் தலையீட்டுடன் இவற்றை எவ்வாறு பெற்றுக் கொள்வது என்பனதான் இந்த மக்களின் விஷேட பிரச்சினையாகக் காணப்படுகின்றது. நாட்டின் ஏனைய மக்களோடு ஒப்பிடும் போது, ஏனைய மக்களுக்கு இந்தப் பிரச்சினை இல்லை என்ற அடிப்படையில், மலையக மக்களுக்குள்ள தனித்துவமான பிரச்சினைகளாக இவற்றை நோக்க வேண்டியுள்ளது.

**இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண்பதில் மலையகக் கட்சிகள் எந்தளவுக்குப் பங்களிப்பைச் செய்திருக்கின்றன? எந்தளவுக்கு அதில் வெற்றி பெற்றிருக்கின்றன?**

வெற்றி பெற்ற விடயம் எனக் கூறும்போது, பறிக்கப்பட்ட குடியுரிமையைப் பெயரளவிலேனும் பெற்றுக்கொண்டமையைக் குறிப்பிடலாம். ஏனெனில், இன்று நாம் வாக்களிபபதற்கு குடியுரிமை இருக்கின்றது. இரண்டாவதாக குடியுரிமை பறிக்கப்படுவதற்கு முன்னரே இலவசக்கல்வி அறிமுகப்படுத்தப்பட்ட இந்த நாட்டில், இந்த மக்களுக்கு இலவசக் கல்வியும் மறுக்கப்பட்டது. அதாவது இலவசக் கல்விக்கு எண்பது ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாறு இலங்கையில் இருக்கின்றதென்றால், அந்த இலவசக் கல்வி இறுதி 40 வருடங்களாகத்தான் இந்த மக்களுக்குக் கிடைக்கின்றது. அதற்கு முன்னர் அவர்களுக்கு அது மறுக்கப்பட்டது. கடந்த 40 ஆண்டுகளாக இலவசக் கல்வியைப் பெற்றுக்கொண்டமை ஒரு வெற்றியெனக் கொள்ளலாம். அது வெவ்வேறு காரணங்களுக்காக வழங்கப்பட்டிருந்தாம் கூட, இன்று இலவசக் கல்வியைப் பெற்றுக்கொண்டு ஏனைய மக்களுக்கு சமமாக வளர்ச்சியடைவது ஒரு வெற்றி எனச் சொல்லாம்.

அதேவேளையில், வாக்குரிமையைப் பெற்றுக்கொண்ட பின்னர் ஏழு அல்லது எட்டு உறுப்பினர்களைப் பெற்றுக்கொள்ளும் வகையில் அவர்கள் வாக்களிப்பை மேற்கொள்கின்றார்கள் என்பது ஒரு பலமான அம்சம்.

பலவீனமாகப் பார்க்க வேண்டியது, அந்த வாக்களிப்பின் மூலமாகப் பெற்றுக்கொண்ட அரசியல் பிரதிநிதித்துவத்தின் மூலமாக தாங்களே அத்தனையையும் செய்துவிட வேண்டும் என்ற எண்ணப்பாட்டில் இந்த அரசியல் கட்சிகளும், தலைவர்களும் செயற்படுகின்றார்களே தவிர, அவர்களுக்கான முறைமை ஒன்றை ஒன்றை உருவாக்குவதில் இந்தக் கட்சிகள் அக்கறையுடன் செயற்படவில்லை.

• • •

## தோட்டங்களும் ... தொடர்ச்சி ...

கர்ப்பிணிகளுக்கும், குழந்தை காப்பகங்களின் அருகே வேலை கோரும் உரிமையை பாலூட்டும் தாய்மார்களுக்கும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

**செயலிழந்த போக்கு**

தொழிலாளர்களின் தொழில்சார் உரிமைகள் மற்றும் நலன்புரி விடயங்கள் என்பவற்றை பாதுகாக்கும் நோக்கில் சட்டங்கள் பல காணப்பட்டபோதும் பல சந்தர்ப்பங்களில் இச்சட்டங்களின் செயலிழந்த போக்கினையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. ஏட்டுச் சுரைக்காயாக இச்சட்டங்கள் முடக்கம் பெற்றுக்கொள்ள நிலையில் தொழிலாளர்கள் மழுங்கடிப்பிற்கு உள்ளாகின்றனர். கம்பனிகள் தோட்டங்களை பொறுப்பேற்றதன் பின்னர் தொழிலாளர்களின் தொழில் உரிமைகள் மற்றும் நலன்புரி விடயங்களில் கம்பனிகள் கரிசனை காட்டுவதில்லை என்ற மிகப்பெரும் குற்றச்சாட்டும் இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிலையில் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான தொழில்சார் உரிமைகளையும் அவர்களுக்கான நலன்புரி விடயங்களையும் பாதுகாப்பதற்கு தனியானதொரு சட்டம் இயற்றப்பட வேண்டுமென்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் அமைச்சருமான ஜீவன் தொண்டமான் யோசனை ஒன்றை முன்வைத்துள்ளார். இந்த யோசனைக்கு தொழில் அமைச்சின் ஒப்புதலும் கிடைக்கப் பெற்றுள்ளமை பாராட்டத்தக்கதாகும். இதற்கமைய இது தொடர்பான சட்ட மூலத்தை விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அதனை நிறைவேற்றுவதற்கு தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார இணக்கம் தெரிவித்திருப்பதாகவும் அறிந்து கொள்ள முடிகின்றது. இதேவேளை தொழில் சட்டத்துக்கு புறம்பாக மேலதிக சட்டமாகவே இச்சட்டம் அமுலுக்கு வருமென்றும் இது பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு கிடைத்த அங்கீகாரமாகும் என்றும் இ.தொ.கா.வின் உபதலைவர் பாரத் அருள்சாமி தெரிவித்திருக்கின்றார்.

மேலும் கடந்த காலத்தில் கூட்டு ஒப்பந்தத்தின் ஊடாகவே நலன்புரி விடயங்கள் பாதுகாக்கப்பட்டன. எனினும் நலன்புரி விடயங்கள் முழுமையாக தொழிலாளர்களை சென்றடையவில்லை. இந்நிலையில் தற்போது சட்டத்தின் ஊடாக தொழில் பாதுகாப்பு மற்றும் நலன்புரி விடயங்களைப் பாதுகாக்க வாய்ப்பு கிடைத்துள்ளது என்றும் பாரத் தெரிவித்துள்ளார். சட்டங்கள் இயற்றப்படுவது சிறப்பாகும் அதேவேளை அவற்றை உரியவாறு நடைமுறைபடுத்தவும் சகலரும் அழுத்தம் கொடுப்பது அவசியமாகும்.

இந்நிலையில் 'தோட்டங்களில் உள்ள லயன் தொடர் அறைகளில் அல்லது வீடுகளில் குடியிருப்பதன் காரணமாகவே சமூக நலன் வசதிகளை ஏற்படுத்துவதில் பிரச்சினைகள் தோன்றுகின்றன. இவ்வீடுகள் குடியிருப்போருக்கே உரிமையாக்கப்பட்டு தோட்டக் குடியிருப்புகளும் கிராமக் குடியிருப்புக்களாக மாற்றம் பெறுமிடத்து, நாட்டின் ஏனைய துறைகளைப் போன்று இங்கும் சமூகநலன் வசதிகளை வழங்குவது சாத்தியமாகும். அத்துடன் இம்மக்களை இலகுவாக தேசிய நீரோட்டத்திற்குள் இணைக்கக் கூடியதாகவும் இருக்கும். தோட்ட மக்களுக்கு எதிர்காலத்தில் சிறந்த சமூகநலன் வசதிகளை ஏற்படுத்துவதற்கு இதுவே பொருத்தமான வழியுமாகும்' என்று பேராசிரியர் மு.சின்னத்தம்பி தனது கட்டுரையொன்றில் சுட்டிக்காட்டியுள்ளமையும் இங்கு நோக்கத்தக்கதாகும். இவற்றின் அடிப்படையில் செயற்பாடுகள் அமைவது சிறப்பாகும்.

## ஐரோப்பிய சதுர ... தொடர்ச்சி ...

அது கைகூடும் சில சமயங்களில் அது கிடைக்காது. இந்த போட்டியில் வெற்றியீட்டியதையிட்டு நான் பெருமிதம் கொள்கின்றேன் என போதனா தனது வெற்றி குறித்து பி.பி.சி செய்தி நிறுவனத்திற்கு கருத்து தெரிவிக்கும் போது தெரிவித்துள்ளார்.

8 வயது சிறுமி மிகவும் அதிசயிக்கத்தக்க வெற்றியை ஈட்டியுள்ளது தன்னை ஆச்சரியப்பட வைத்துள்ளதுடன், அவரின் திறமையை கண்டு பெருமிதமும் கொள்ளவைப்பதாக றோமானியா நாட்டைச் சேர்ந்த சதுரங்க விளையாட்டு சாதனையாளர் ஜரீனா பொல்மகா தெரிவித்துள்ளார்.

போதனா அண்மையில் பிரித்தானியாவின் பிரதமர் ரிசி சுனாக்கையும் சந்தித்திருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

## இயற்கையையும்... தொடர்ச்சி ...

ஒரு மக்களினம் தனதாட்சியாக வெளிப்படுத்துவதற்கு அந்த மக்களிடை அறிவுத் தெளிவும் பாலியல் சமத்துவமும் சகோதரத்துவமும் சுதந்திர உணர்வும் அம்மக்கள் கூட்டத்தின் அறிவாக வளர்க்கப்பட வேண்டும் என்பதே பாரதியின் பாடல்கள் பலவற்றிலும் பேசப்படும் பொருளாக உள்ளது. கூட்டு மொத்தமாகச்ட சொல்வதனால் எவர் தன்னுடைய இயற்கையாக உள்ள தன்நாட்டையும் அந்த நாட்டில் வாழும் உயிர்களையும் நேசிக்கின்றாரோ அவரே அந்த மண்ணினதும் மக்களதும் விடுதலைக்கான ஆளுமையாக மாறுவார் என்பதே பாரதியின் இயற்கையையும் உயிர்களையும் நேசித்த பாடல்களும் எழுத்துக்களும் எமக்குத் தரும் செய்தியாக உள்ளது.

இந்த அடிப்படையில் தாயகத்திலும் புலத்திலும் தமிழ்க்கல்வி நாடாக உள்ள தாயகத்தையும் அதில் வாழும் உயிர்களையும் குழந்தைகள் நேசிக்கத் தக்கவகையில் மீளுருவாக்கம் செய்யப்பட வேண்டும். அப்பொழுதுதான் இது என் தேசம் நாங்களும் இவர்களும் ஒன்று என்று மக்கள் தேசமாக எழுகின்ற நடைமுறைத்தன்மை தோன்றும் என்பதே பாரதி இயல் தரும் மக்களுக்கு அறிவூட்டும் சத்தியாக உள்ளது.

பாரதியையும் விஞ்சுகின்ற முறையில் தனது இயற்கையான தமிழீழத் தேசத்தையும் தனது தேசத் தலைவனையும், தேசத்தலைவர் தலைமையில் 31 ஆண்டுகள் நடைமுறையரசில் மகிழ்வாக வாழ்ந்திருந்த தாயக மக்களையும் நேசித்து அந்த உணர்வுகளை விடுதலை வீச்சு மிக்க கவிதையாக்கி மக்களுக்குச் சத்தியிளத்த தேசியக் கவிஞனாக வரலாறு படைத்த ஈழத்தமிழர்களின் தேசியக் கவிஞன் புதுவை இரத்தினதுரை அவர்களின் 75 வது அகவையும் பாரதியின் பிறந்த நாள் இடம் பெறும் மார்கழி 11க்கு ஒருவாரம் முன்னதாக மார்கழி 4 இல்தான் இடம்பெற்றது. உலகத் தமிழர்களின் 19ம் நூற்றாண்டு விடுதலைக் கவிஞன் பாரதி என்றால் 21ம் நூற்றாண்டின் விடுதலைக் கவிஞன் புதுவை இரத்தினதுரை இந்நிலையில் இன்று ஒரு தேசவிடுதலைப்போராட்டத்தை தனது வாழ்வாகவே முன்னெடுத்து வரும் ஈழத் தமிழர்கள் தாயகத்திலும் புலத்திலும் மக்கள் வரலாற்றை தமது இளம் தலைமுறையினரின் அறிவாக மாற்றத் தக்கவிதத்தில் தங்கள் தாயக மண்ணையும் மக்களையும் நேசிக்கும் வணங்கும் பண்புள்ளவர்களாக கல்வித்திட்டங்களையும் கற்பித்தல் முறைமைகளையும் எந்த அளவுக்கு மாற்றுகின்றார்களோ அந்த அளவுக்குத் தாயகத்தில் பாதுகாப்பான அமைதி வாழ்வை மக்கள் தம் தன்னாட்சியாகப் பெறும் காலம் உறுதிப்படும்.

• • •

## எமது பொருளா ... தொடர்ச்சி ...

2018 ஆம் ஆண்டு மக்களால் தரிவு செய்யப்பட்ட அரசை இராணுவம் கைப்பற்றியிருந்தது. 1947 ஆம் ஆண்டு பாகிஸ்தான் சுதந்திரமடைந்த பின்னர் அது மிகப்பெரும் பொருளாதார நெருக்கடியை தற்போது சந்தித்துள்ளது.

பொருளாதார வீழ்ச்சியில் இருந்து நாட்டை காப்பாற்றுவதற்காக அனைத்துலக நாயண நிதியம் பாகிஸ்தானுக்கு 3 பில்லியன் டொலர்களை கடனாக வழங்கியிருந்தது. அதேசமயம், உலக வங்கியும் 350 மில்லியன் டொலர்களை வழங்கியிருந்தது.

1993, 1999, 2017 ஆம் ஆண்டுகளில் மூன்று தடவைகள் பிரதமராக பதவி வகித்த நவாஸ் செரீப் தற்போது எதிர்வரும் தேர்தலில் போட்டியிடுவதற்கு ஆவலாக இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.